DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H Selvanayagam Broker

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX Realty Inc. Brokerage
416-948-0693

CAMSONICS
SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
RE/MAX
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial
Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurence;
Citizenship;
Permanent resident card renewal;
Affidavits for Immigration purposes;
Kokulan Baskaran
Tel : 647-344-6600

Ontario approved Pawn Brokers Pioneers and established leaders in the community
KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்
சிந்திக்கும் தமிழ் உலகின் உலகில் எந்திக்கும் கதிர் வீச்சு
$1.00
416-752-1524
416-752-6703
உதயம் 1295 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 29, 2021

# வடக்கு ஒன்றாரியோவில் கோவிட்-19 தொற்று அதிகரிப்பதால் பாடசாலைகளை திறப்பது தாமதமாகலாம்?

ஒன்றாரியோ மாகாணத்தில் கோவிட்-19 தொற்று அதிகரிக்கும் பிரதேசங்களாகக் கருதப்படும் ஒட்டாவா, லண்டன், கிழக்கு ஒன்றாரியோ நகரங்கள் மற்றும் தென்மேற்கு ஒன்றாரியே நகரங்கள் ஆகிய இடங்களில் பாடசாலை-களை மீண்டும் திறப்பதில் கல்விச் சபைகளும் சுகாதாரப் பிரிவுகளும் தயக்கம் காட்டுவதாகக் கூறப்படுகின்றது கடந்த ஜனவரி 11ம் திகதி மீண்டும் திறக்கப்பெற்ற ஒன்றாரியோ பாடசாலைகளில் குறைந்தது 14 பேருக்கு தொற்று இருந்ததாக கண்டு பிடிக்கப்பட்டதும் இந்த தயக்கத்திற்கான காரணம் என்றும் கூறப்படுகின்றது.

கண்டு பிடிக்கப்பட்ட 14 தொற்றாளர்களில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் அடங்குவதாகவும் கூறப்படுகின்றது

தொற்றாளர்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் சுமார் 280,000 மாணவர்கள் பாடசாலைக்கு திரும்பவுள்ள நிலையில் இவர்கள் தொடர்பாக கல்விச் சபைகளும் சுகாதாரப் பிரிவு அதிகாரிகளும் அதிக சிரத்தை எடுத்து எவ்வாறு இந்த சவால்களுக்கு முகம் கொடுக்கலாம் என்று ஆராய்ந்து வருவதாகவும் கூறப்படுகின்றது

இந்த நிலையில் சட்பெறி நகரத்தில் உள்ள ஆறு பாடசாலைகளில் சுமார் 22 பேருக்கு தொற்றுள்ளதை பரிசோதனைகள் மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும், ஒரு கிறிஸ்தவப் பாடசாலையிலும் குறிப்பிட்ட சில மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோருக்கு தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாவும் இதனால் அங்கும் பதற்றம் நிலவுவதாகவும் அறியப்படுகின்றது. மேலும் கடந்த 26ம் திகதி சட்பெறி நகரத்தின் சுகாதாரப்பிரிவினர் செய்த பரிசோதனை முடிவுகள் இன்னும் வராதவிடத்து அடுத்த வாரத்தில் பாடசாலைகளுக்கு மாணவர்களை வகுப்புகளில் பயில அனுமதிக்கலாமா என்பதையும் அதிகாரிகள் முடிவெடுக்க முடியாமல் உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

# வறிய மாணவர்களுக்கு பேருதவி! ரொரன்ரோ மனித நேயக் குரலுக்கு நன்றி தெரிவித்த பள்ளி அதிபர்





மிகவும் பின் தங்கிய பிரதேசத்தை சேர்ந்த தமது பாடசாலைக்கு கனடா நாட்டின் ரொரன்ரோ மனித நேயயக் குரல் அமைப்பு வழங்கிய உதவி பேருதவியாக அமைந்துள்ளதாக கிளிநொச்சி மாயவனூர் அதிபர் திருமதி ல. கோபாலராசா தெரிவித்தார். கிளிநொச்சி மாயவனூர் வித்தியாலயத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு பாடசாலையின் பிர-தான மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பேசிய பாட-சாலை அதிபர் திருமதி ல. கோபாலராசா தமது பாடசாலை மி-கவும் பின்தங்கிய பாடசாலை என்றும் அங்கு கல்வி பயிலும் மாணவர்கள் பல்வேறு நிலையிலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் குறிப்பிட்டார்.

இந்தச் சூழலில் தமது பாடசாலையில் கல்வி கற்று புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளியை தாண்டி சித்தி பெற்ற மாணவியும் குறித்த பரீட்சையில் சித்தி பெற்ற ஏனைய மாணவர்களும் புதிய கற்றல் உபகரணங்களுடன் கல்வியை தொடர ரொரன்ரோ மனிய நேய அமைப்பு செய்த உதவி பேருதவி என்றும் குறிப்பிட்டார். புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய 13 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. அத்துடன் விசேட தேவை உடைய மாணவர்கள் மற்றும் போர் மற்றும் சமூக நெருக்கடிகளால் தாய் அல்லது தந்தையின்றி ஆதரவற்ற நிலையில் உள்ள மாணவர்களுக்குமாக 20 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

பாடசாலை முதல்வர் திருமதி ல. கேபாலராசா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி இராதநாதபுரம் மகா வித்தியாலய அதிபர் க. புண்ணியமூர்த்தி சிறப்பு அதிதியாக கலந்து கொண்டார். அத்துடன் நிகழ்வை ஒருங்கிணைப்பு செய்த ஈழத் தமிழ் கலை பண்பாட்டுக் கழக தலைவரும் கவிஞருமான தீபச்செல்வனும் நிகழ்வில் கலந்து கொண்டார்.

இந்த நற்பணி வைபவத்திற்கு கனடாவிலிருந்து நிதி அன்பளிப்பை ரொரன்ரோ மனித நேயக் குரல் அமைப்பிற்கு வழங்கிய பெருந்தகைகள் பின்வருவோர்:

திரு சாந்தா பஞ்சலிங்கம்- தொழிலதிபர்- தலைவர்- கனடா தமிழர் வர்த்தக சம்மேளனம், திரு ரஜீவ் செபராசா- முன்னாள் ஆசிரியர் -வவுனியா மற்றும் உரிமையாளர் கனடா கெம்சோனிக்ஸ் பாதுகாப்பு கருவிகள் நிறுவனம்,மற்றும் திரு பாலா லோகன்- வீடு விற்பனை முகவர் கனடா, டாக்டர் கதிர் துரைசிங்கம்-கனடா ஆகியோர்.

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000
Visit GtaCredit.Com
* North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON AD TEAM

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404

THE GUARDIAN
HOME REALTY INC.,BROKERAGE
Independently Owned and Operated

# Where life begins...



வீடு வாங்க விற்க அல்லது
அது தொடர்பான விடயங்களை அறியவும்,
இலவச ஆலோசனைகளை
பெற்றுக்கொள்ளவும்

THE GUARDIAN
HOME REALTY INC.

## Real Estate

முகவராக விரும்பும்
அன்பர்களே

*We recruit* and train personnels who want to become a real estate agent as a career.

*We provide* tthem an opportunity as an agent in our company.

## Contact us

F119 - 80 Nashdene Road
Scarborough ON M1V 5E4

Phone: (416) 989 - 6565 web: www.theguardianhomes.com

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

GHURUS TOWING
Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire
We pay scrap up to $1000
NIRMALAN (ROGER):
(416) 990-7777
(416) 984-7777

COMPUTER REPAIR
Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.
VARUNAN:
(416) 894-6244

உதயன் கதிரோட்டம்

# தமிழக மக்களின் துயரத்தில் பங்கெடுக்கும் உணர்வு வடக்கு கிழக்கில் மேலோங்கியுள்ளது வரவேற்கத்தக்கதே!

கடந்த 2009ம் ஆண்டு மே மாதத்தில் உலக மக்களே அதிர்ச்சியடையும் வண்ணம் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைகள் இன்னும் எமது மனங்களில் மாறாத வடுக்களாகவே தொடர்கின்றன. அன்று எமது மக்களும் போராளிகளும் தளபதிகளும் யுத்த விதிகளுக்கு முரணான வகையில் கொல்லப்படுவதை உலக நாடுகள் பல பார்த்துக் கொண்டிருந்தன. இந்தியாவை ஆண்டுகொண்டிருந்த காங்கிரஸ் கட்சியும், தமிழ்நாட்டில் ஆட்சியிலிருந்த கலைஞர் கருணாநிதியின் திமுக கட்சியும் அந்தப் படு-கொலைகளை தட்டிக் கேட்காமல் மௌனிகளாக இருந்தன. ஆனால் அந்த கொடுமைகள் அரங்கேறிய இறுதி நாட்களில் எமது தமிழகத்தின் உறவுகள் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் கைகளில் ஆட்சி அதிகாரம் இருக்கவில்லை. ஆயுதங்கள் இருக்கவில்லை. ஆனால் தமிழ்நாட்டிலிருந்த சில உணர்வாளர்களிடத்தில் அவர்களின் உயிர்கள் மட்டுமே இருந்தன.

தமது ஈழத்தமிழ் உறவுகள் அநியாயமாகக் கொன்று வீழ்த்தப்படுகின்றார்கள் என்று அவர்கள் துயரத்தின் உச்சத்திற்கு சென்றார்கள். தங்களை உணர்வு பூர்வமான ஆதரவை எம் மக்களுக்குத் தருவதற்காக தங்கள் உயிர்களையே கொடுக்கத் தயாரானார்கள். முத்துக்குமார் போன்ற மனிதப் போராளிகள் தங்கள் உடலையே எரித்துக்கொண்டார்கள். இவ்வாறு தங்கள் உயிர்களை ஈழத்தமிழர்களுக்காக அர்ப்பணித்த அந்த

போராளிகளின் உயிர்கள் விலகி உடல்கள் தரையில் வீழ்ந்த பின்னரும் கலைஞர் கருணாநிதீ போன்ற தலைவர்களுக்கு இரக்கமே வரவில்லை. ஆனால் தமிழ்நாட்டின் ஏனைய தலைவர்களான சீமான், பழ. நெருமாறன் போன்றவர்கள் எம் மக்களுக்காகவும் தமிழ்நாட்டில் தங்கள் உயிர்களை அர்ப்பணித்த தியாகிகளுக்காகவும் கண்ணீர் விட்டார்கள். தமிழ்நாட்டு மக்களை ஒன்று திரட்டி ஆர்ப்பாட்டங்களைச் செய்தார்கள். அவ்வாறான அந்த ஆதரவிற்கு தற்போது, எமது ஈழ மண்ணில் வடக்கு கிழக்குப் பகுதிகளில் மக்கள் தங்கள் மனங்களைத் திறந்து வைத்து தமிழகத்தின் உறவுகளுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்காக இரங்கல் தெரவித்துள்ளார். இந்த எழுச்சி வரவேற்கத்தக்கதாகவும் உணர்பூர்வமாகவும் உள்ளதாக வடக்கு கிழக்கு பகுதிகளிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆமாம்! எமது தொப்புள்கொடி உறவுகளுக்காக எம் தாயகத்திலிருந்து அங்கு தங்கள் சொந்தங்களை இழந்து தவிக்கும் குடும்பங்களுக்காக கூடி நின்று கண்ணீர் விட்டவர்கள் பாராட்டுகின்றோம்.. இவவாறு தமிழக மக்களின் துயரத்தில் பங்கெடுக்கும் உணர்வு வடக்கு கிழக்கில் மேலோங்கியுள்ளது வரவேற்கத்தக்கதே!

# கடல் எல்லையில் உயிரிழந்த நான்கு தமிழக மீனவர்களுக்காக மட்டுநகரில் இடம்பெற்ற அஞ்சலி செலுத்தும் நிகழ்வு



இலங்கை கடற்பரப்பில் உயிரிழந்த தமிழக மீனவர்கள் நான்கு பேருக்கும் மட்டக்களப்பு மாவட்ட தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் அஞ்சலி நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் அவர்களின் உருவப்படங்களுக்கு மலர் மாலை அணிவித்து விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் அங்கத்தவர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் கே.சுரேஸ் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியதுடன் அஞ்சலி உரைகளும் நிகழ்த்தப்பட்டன. இங்கு உரையாற்றிய தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் சுரே' கருத்து தெரிவிக்கையில், இந்திய இலங்கை எல்லையில் நடந்த துன்பியல் சம்பவத்தில் எமது தொப்புள்கொடி உறவுகளான நான்கு தமிழக மீனவர்கள் உயிரிழந்தமை ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு துயர் சம்பவமாகும். இந்த மீனவர்கள் உயிரிழப்புக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம் என கூறினார்.

# அப்பாவித் தமிழர்கள் காணாமல் போவது போன்று இந்து ஆலயங்களும் காணாமற் போகின்றனவா?



எமது தமிழர் பிரதேசங்களில் தமிழ் மக்கள் தான் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் தற்போது எமது இந்து ஆலயங்களும் காணாமல் ஆக்கப்பட்டு வருகின்றன என்று கவலையோடு தெரிவித்துள்ளார் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன். முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையில் இருந்த தமிழர்களுடைய வழிபாட்டு அடையாளங்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதோடு இந்துக் கோவிலை காணவில்லையென அப்பகுதி கிராம மக்களின் சார்பாக தெரிவித்துள்ள அவர், முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் புதன்கிழமை முறைப்பாடொன்றினைப் பதிவு செய்துள்ளார். அதேவேளை காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் வழிபாட்டு அடையாளங்கள் மீண்டும் அவ்விடத்தில் நிறுவவேண்டும் எனவும், தொடர்ந்தும் தமிழ் மக்கள் குருந்தூர் மலைக்குச் சென்று தமது வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதிக்க

வேண்டும் எனவும் ரவிகரன் குறித்த முறைப்பாட்டினூடாக கோரியுள்ளார். மேலும் முறைப்பாடு தொடர்பில் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில், முச்சூலம் உள்ளிட்ட தமிழர்களின் வழிபாட்டு அடையாளங்கள் அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளதாக ஊடகங்கள் மூலமாகவும், ஆலய நிர்வாகத்தினர் மற்றும் அங்குள்ள மக்கள் மூலமாக எனக்கு தகவல் தரப்பட்டது. அதேவேளை குருந்தூர் மலைக்கு வழிபாட்டுக்குச் செல்லும் தமிழ் மக்களும் அங்கு செல்லவிடாமல் தடுக்கப்படுகின்றனர் எனவும் என்னிடம் கோவில் நிவாகத்தினர் முறையிட்டிருந்தனர் இந் நிலையில் மக்களின் இந்த முறைப்பாடுகளுக்கமைய குருந்தூர் மலை ஆதிசிவன், ஐயனார் கோவிலுக்கு நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன், சிவஞா-னம் சிறீதரன் உள்ளிட்டவர்களுடன் நானும், சில பிரதேசசபை தவிசாளர்கள், உறுப்பினர்களோடும் சென்றிருந்தோம். அப்போது மக்களால் முறையிடப்பட்டதைப் போலவே, அங்கு சென்ற எங்களையே அங்கிருந்த இராணுவத்தினர் மலைப் பகுதிக்குச் செல்லவிடாது தடுத்திருந்தனர். பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமாநாயக்க மற்றும் உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்திய நிலையில் குருந்தூர் மலைப் பகுதிக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டோம். இதனைவிட ஆலய நிர்வாகத்தினர், ஊடகங்கள் வாயிலாக அறிந்ததைப் போலவே அங்கிருந்த தமிழர்களின் வழிபாட்டுச் சின்னங்களும் அகற்றப்பட்டிருப்பதையும் அவதானிக்க முடிந்தது என்றும் அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

# ரஞ்சன் ராமநாயக்க தண்டனை அனுபவிப்பதற்கு ரணில் விக்கிமசிங்கதான் காரணம் என்கிறார் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே



அண்மையில் நீதிமன்றத்தால் சிறைக்கு அனுப்பப்பட்ட ரஞ்சன் ராமநாயக்க குற்றம் செய்ததால் தான் அதை அனுபவிக்கின்றார். இதற்கெல்லாம் காணமாக ரணில் விக்கிமசிங்க சிரித்துக் கொண்டே இருக்கின்றார். ரஞ்சனின் வாய் காரணமாகவும் ஐ.தே.க காரணமா-கவும் அவர் சிறைக்குச் சென்றுள்ளார். தனது கட்சிக்காரர்களால் பல ஆண்டுகளாக 'சேர் சேர்' என அழைக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை இன்று 'மிஸ்டர் பீன்' என அழைக்கின்றனர். அதனால் 'சார்லி சாப்லின்' பற்றி எதிர்க் கட்சியினர் கூறும் கருத்துகளை பொருட்படுத்த மாட்டோம் ' இவ்வாறு பாராளுமன்றத்தில் தெரிவித்தார் இலங்கையின் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே. பாராளுமன்றத்தில், பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்கவால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணைமீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தாவது,

அரசாங்கத்தின் தேவைக்கோ, பிரதமரின் தேவைக்கோ அல்லது ஜனாதிபதியின் தேவைக்கோ ரஞ்சன் ராமநாயக்க சிறைக்குச் செல்லவில்லை. ரஞ்சன் சிறைக்குச் சென்றுள்ளதால் அரசாங்கத்தால் என்ன செய்ய முடியும். எம்மால் ஒன்றும் செய்ய முடியாது. எமது நாட்டின் நீதித்துறை ஊழல்மிக்கதெனவும், சட்டத்தரணிகளை திருடர்கள் எனவும், உயர்நீதிமன்றம் முதல் அனைத்து நீதிமன்றங்களும் ஊழல் மிக்கதென்றார். நீதிமன்றத்தை ஊழல்மிக்கதென கூறியதால் சிறைக்கு அனுப்பட்டவருக்கு கறுப்பு சால்வை அணியும் ஒரே கட்சி எதிர்க்கட்சிதான். ரஞ்சன் ராமநாயக்க எமக்குச் சொந்தமான வாகன அனுமதிப் பத்திரத்தை இரண்டு பேருக்கு விற்பனை செய்துள்ளார். இரத்தினபுரி பொலிஸ் நிலையத்தில் அதற்கான முறைப்பாடு உள்ளது. ஒரு அனுமதிப் பத்திரத்தை இரண்டு பேருக்கு விற்பனை செய்த ஒரே பாராளுமன்ற உறுப்பினர் அவர்தான். கண்டியில் காந்தி என்ற ஆசிரியையை திருமணம் செய்வதாக பத்து இலட்சம் பெற்றுக்கொண்டு அவரை ஏமாற்றியுள்ளதாக கண்டி நீதிமன்றில் வழக்கொன்று உள்ளது. தெல்தெனியவில் ஒரு ஹோட்டலில் சினிமா கதையையொன்று படம்பிடித்துவிட்டு 17இலட்சம் ரூபாவை கொடுக்காது ஏமாற்றியுள்ளார். ஆனால், எதிர்க்கட்சியினர் உண்மைக்காக போராடியதால் ரஞ்சன் சிறைக்குச் சென்றுள்ளதாக எதிர்க்கட்சியினர் பாராளுமன்றில் கோசமிடுகின்றனர். ரஞ்சனின் வாய் காரணமாகவும் ஐ.தே.க காரணமாகவும் அவர் சிறைக்குச் சென்றுள்ளார். ஐ.தே.கவின் முழு அமைச்சரவையும் பொறுப்புக்கூற வேண்டும். இன்று சபையில் கறுப்பு சால்வை அணிந்திருக்கும் ஹரின் பெர்ணான்டோவும் பொறுப்புக்கூற வேண்டும். ஆகவே, நீதிபதிகளுக்கும், ஊழல் மோசடி பிரிவுக்கு வழக்குகள் தொடர்பில் அழுத்தம் கொடுத்தவருக்காகவும் புனிதமான பாராளுமன்றில் கறுப்புச் சால்வையை அணிவதால் நாம் கவலையடைகிறோம்.

இலங்கை செய்திகள்

# வட்டு இந்து வாலிபர் சங்கம் இரு கண்கள் பார்வை அற்றவருக்கு நல்லின மாடு ஒன்றை வழங்கியது



65,000 நிதி அன்பளிப்பின் மூலம் முல்லைத்தீவு மாவட்டம் மூங்கிலாறு கிராமத்தைச் சேர்ந்த கந்தையா சிவானந்தன் அவர்கள் கடந்த காலயுத்த நிலைமைகளினால் பாதிக்கப்பட்டு இரண்டு கண் பார்வை திறனை இழந்த நிலையில் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாகவும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வருகின்றார் அவரின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கு மாடு வளர்ப்பிற்கான உதவியினை செய்து தருமாறு வட்டு இந்து வாலிபர் சங்கத்திடம் வன்னி விழிப்புலனற்றோர் அமைப்பினால் கடிதம் மூலம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இன்றைய தினம் ரூபா 65,000 பெறுமதியில் சினைப்பருவத்தில் உள்ள நல்லின மாடு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.



# இலங்கையில் ஏற்கனவே இதுவரை 297 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன

இச்செய்தி எழுதுப்படும் போது இலங்கையில் கொவிட்-19 தொற்று தொடர்பான மேலும் 7 மரணங்கள் பதிவாகியுள்ளதாக, எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்கனவே 290 கொரோனா மரணங்கள் பதிவான நிலையில், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள 7 மரணங்களுடன், இலங்கையில் இதுவரை 297 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அறிவிக்கப்பட்டவர்களில் இருவர் இன்றும் (28) ஒருவர் நேற்றையதினமும் (27) நேற்றுமுன்தினம் ஒருவரும் (26) ஜனவரி 24, 21, 16 ஆகிய தினங்களில் தலா ஒருவரும் மரணமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கையில் கடைசியாக சம்பவித்த மூன்று மரணங்கள் தொடர்பான விபரங்களையும் எமது செய்தியாளர் இணைத்துள்ளார்.

295ஆவது மரணம் - கொழும்பு சிறைச்சாலையிலிருந்து, 61 வயதான ஆண் கைதி ஒருவர், சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், கொவிட்-19 தொற்றாளராக அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமடைந்துள்ளார். அவரது மரணம் கடந்த ஜனவரி 16ஆம் திகதி நிகழ்ந்துள்ளது. அவரது மரணத்திற்கான காரணம், கொவிட்-19 நியூமோனியா, மாரடைப்பு மற்றும் உக்கிர நீரிழிவு நோய், என அறிவிக்கப்பட்டுள்ளது.

296ஆவது மரணம் - கொழும்பு 06 (வெள்ளவத்தை/கிருலப்பனை) பிரதேசத்தைச் சேர்ந்த, 67 வயதான பெண் ஒருவர், கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் மரணமடைந்துள்ளார். அவரது மரணம் கடந்த ஞாயிற்றுக்கிழமை (24) நிகழ்ந்துள்ளது. அவரது மரணத்திற்கான காரணம், கொவிட்-19 நியூமோனியா மற்றும் உக்கிர ஆஸ்த்துமா நோய், என அறிவிக்கப்பட்டுள்ளது.

297ஆவது மரணம் - எந்தரமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த, 62 வயதான ஆண் ஒருவர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வேளையில் மரணமடைந்துள்ளார். அவரது மரணம் கடந்த ஜனவரி 21ஆம் திகதி நிகழ்ந்துள்ளது. அவரது மரணத்திற்கான காரணம், கொவிட்-19 நியூமோனியா மற்றும் சிக்கலான சிறுநீரக நோய், என அறிவிக்கப்பட்டுள்ளது.

# விமானப் படையின் விமானங்கள் கொழும்பில் தாழ்வாகப் பறப்பதால் பட்டங்கள் பலூன்கள் பறப்பதற்குத் தடை

தற்போது கொழும்பு மற்றும் அருகில் உள்ள பிரதேசங்களின் வான் பரப்பில் இலங்கை விமானப் படையின் ஒத்திகைகள் நடைபெறுவது காரணமாக விமானப் படையின் விமானங்கள் கொழும்பு வான் பரப்பில் மிகவும் தாழ்வாக பறக்கின்ற நிலையில் ட்ரோன் கெமராக்கள், பட்டங்கள் மற்றும் பலூன்களை உயர பறக்கவிடுவதானது மேற்படி விமானங்களுக்கு பாரிய ஆபத்தாக அமையலாம் என விமானப் படையின் தலைமையகம் விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு வான் பரப்பில் ட்ரோன் கெமராக்கள், பட்டங்கள் மற்றும் பலூன்களை உயர பறக்கவிடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு இலங்கை விமானப் படை தலைமையகம் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாட்டின் 73ஆவது தேசிய சுதந்திர தின பிரதான நிகழ்விற்கான ஒத்திகையில் விமானப் படை விமானங்கள் ஈடுப்பட்டுள்ளதால், குறித்த வேண்டுகோளை விமானப்படை முன்வைத்துள்ளது.

விமானப் படை விமானங்கள் இன்று (28) முதல் கொழும்பு வான் பரப்பில் தனது வான்சாகச ஒத்திகையை ஆரம்பித்துள்ளதால் ஜனவரி 28ஆம் திகதி முதல் பெப்ரவரி 04ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மேற்படி வான் பரப்பில் ட்ரோன் கெமராக்கள், பட்டங்கள் மற்றும் பலூன்களை உயர பறக்கவிடுவதை முழுமையாக தவிரத்துக் கொள்ளுமாறு பொது மக்களிடம் வேண்டிடிக் கொள்வதாக இலங்கை விமானப் படையின் பேச்சாளர் குரூப் கெப்டன் துஷான் விஜேசிங்க தெரிவித்தார்.



ஒத்திகை காரணமாக விமானப் படையின் விமானங்கள் கொழும்பு வான் பரப்பில் மிகவும் தாழ்வாக பறக்கின்ற நிலையில் ட்ரோன் கெமராக்கள், பட்டங்கள் மற்றும் பலூன்களை உயர பறக்கவிடுவதானது மேற்படி விமானங்களுக்கு பாரிய ஆபத்தாக அமையலாம் என்று தெரிவித்த அவர், இதனால் ஏற்படக்கூடிய ஆபத்தை முன்கூட்டியே தவிர்க்கும் வகையிலேயே மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழர் பகுதிகளில் மக்களின் வாழ்வுரிமையை பாதுகாக்க அனைத்துத் தரப்புகளையும் ஒன்றிணைப்பதற்கான கலந்துரையாடல்



தமிழ் மக்கள் அதிகமாக உள்ள பகுதிகளில் மக்களின் வாழ்வுரிமையை பாதுகாக்கும் வகையில் அனைத்துத் தரப்புகளையும் ஒன்றிணைத்து அவசர கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில், முழுமையான தமிழ் இனமும் ஒரே நிலைப்பாட்டில் செயற்படுவதற்காக விரைவில் நடவடிக்கை குழு ஒன்றை உருவாக்குவதற்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம். கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே சிவாஜிலிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,....

எந்த கட்சி, எந்த முன்னணி என்பதல்ல இங்கு பிரச்சினை இது ஒட்டுமொத்த தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய, அசுர வேகத்திலே செயற்பட்டுக் கொண்டிருக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை எதிர்கொள்ளுவதற்கான ஒரு தந்திரோபாய வேலைத்திட்டங்களை வகுப்பதற்கான இந்த கூட்டம் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளது.

பங்குபற்றிய அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளிடம் கேட்டிருக்கின்றோம் நீங்கள் தலா இரண்டு பிரதிநிதிகளை தந்து ஒரு நடவடிக்கை குழுவை அமைத்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெடுப்பது என்பதை ஆராய வேண்டும். ஒட்டுமொத்த தமிழ் இனத்தின் சார்பிலே ஒரே நிலைப்பாடாக இருக்க வேண்டும் என்பது தான் இந்த அமைப்பின் நோக்கம்.

இந்த நடவடிக்கை குழு என்பது மக்கள் போராட்டங்களை எவ்வாறு முன்னெடுப்பது ஏனைய விடையங்களை எவ்வாறு கையாள்வது என்பதை பொதுமக்களிடம் இருந்து கருத்துக்களை பெற்றுக்கொண்டு ஒரு சரியான இலக்கை நோக்கி நாங்கள் பயணிப்போம் என தெரிவித்துள்ளார்.

மேற்படி கலந்துரையாடலில் பங்கெடுத்த பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விகளுக்கும் சிவாஜிங்கம் உட்பட பலர் தங்கள் கருத்துக்களை துணிச்சலாகத் தெரிவித்ததாகவும் எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# “இந்தியாவுக்கு நான்கு தலைநகரங்கள் வேண்டும்” - மம்தா பானர்ஜியின் கருத்துக்கு சீமான் வரவேற்பு - நாம் தமிழர் கட்சி

**நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,**

“ஒரே நாடு! ஒரே தலைவர்” எனும் அணுகுமுறை ஏற்புடையதல்ல் எல்லாவற்றிற்கும் எதற்கு டெல்லியைச் சார்ந்திருக்க வேண்டும்? தலைநகரங்களைப் பரவலாக்க வேண்டும். அதற்கு இந்திய நாட்டிற்கு நான்கு தலைநகரங்களை உருவாக்க வேண்டும் என சகோதரி மம்தா பானர்ஜி அவர்கள் கூறியிருப்பது காலத்திற்கேற்ற சாலச்சிறந்த கருத்தாகும். அதனை வரவேற்று முழுமையாக ஏற்கிறேன்.

தலைநகரங்களைப் பரவலாக்குவதன் மூலமே வளர்ச்சியைக் கடைக்கோடி வரை கொண்டு செல்ல முடியும் என்பதையுணர்ந்தே, தமிழ்நாட்டில் ஐந்து மாநிலத் தலைநகரங்கள் இருக்க வேண்டும் எனும் முழக்கத்தை முன்வைக்கிறோம். அதேபோல, இந்தியாவிற்கும் நான்கு தலைநகரங்கள் வேண்டும் எனும் சகோதரி மம்தா பானர்ஜியின் கருத்தை வழிமொழிந்து, அத்தோடு நான்கு தலைநகரங்களில் ஒரு தலைநகரம், தமிழ்நாட்டிலிருந்து உருவாக்கப்பட வேண்டும் எனும் எமது கோரிக்கையையும் இணைத்து அதனையும் முன்வைக்கிறேன். அதிகாரப் பரவலாக்கலும், மாநிலங்களின் தன்னாட்சியுரிமையுமே நாட்டின் ஒருமைப்பாட்டையும், தேசிய இனங்களிடையே சமத்துவத்தையும் தக்கவைத்து, நாட்டின் இறையாண்மையைக் காக்கத் துணைநிற்கும் என்பதையுணர்ந்து, சகோதரி மம்தா பானர்ஜியின் இக்கருத்துக்குத் வலுசேர்க்க வேண்டியது ஒவ்வொரு தேசிய இனங்களின் தலையாயக் கடமையாகும்.




Seeman Welcomes West Bengal CM Mamata Banerjee's Notion that India Needs Four Capitals!

'The One Country; One Leader' Approach is not Appropriate. Why should we depend only on Delhi for everything? Capitals need to be decentralized! Sister Mamata Banerjee's statement that India should adopt the notion of four capitals for its best interest is the need of the hour. I welcome it and fully accept it.

In Thamizh Nadu, realizing that widespread growth can only be achieved through creation of new capitals, we are proposing the notion of having five state capitals. Similarly, I support Mamata Banerjee's idea that Indian Union should have four capitals, and propose that there should one capital from Thamizh Nadu. It is the chief duty of every national race to reinforce this view of Sister Mamata Banerjee, realizing that the devolution of power and the autonomy of the States will help maintain the unity of the Indian Union and equality among the national races and protect the sovereignty of the Indian Union.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# மடு பிரதேச பிரிவில் பாரம்பரியமாக விவசாயக் காணிகளை விவசாயகளுக்கு வழங்க கோரிக்கை



மடு பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள “கோவில் மோட்டை” பகுதியில் பாரம்பரியமாக அரச காணியில் காடுகளை துப்பரவு செய்து குளம் அமைத்து விவசாய செய்கைகளை மேற்கொண்டு வந்த மக்கள் அக் காணிகளை மத ஸ்தாபனம் ஒன்றுக்கு வழங்க முடிவு மேற்கொள்ளப்பட்டதை எதிர்த்து திங்கட்கிழமை (25ம் திகதி) காலை மடு பிரதேசச் செயலகத்திற்கு முன்பாக போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

குறித்த போராட்டத்தில் கடந்த 30 வருடங்களாக கோவில் மோட்டை பகுதியில் விவசாய செய்கைகளை மேற்கொள்ளும் 27 குடும்பங்களை சேர்ந்த அங்கத்தவர்கள் கலந்து கொண்டு தமது நிலங்களை தமக்கே வழங்குமாறு கோரிக்கை முன் வைத்தனர்.

குறித்த கிராம மக்கள் வறுமை கோட்டுக்கு கீழ் வாழ்கின்ற நிலையில் கோவில் மோட்டை பகுதியில் விவசாய செய்கைகளை மேற்கொண்டு வாழ்வாதாரத்தை கொண்டு செல்கின்றனர். இந்த நிலையில் குறித்த காணிகளை பிரிதொரு உரிமையாளருக்கு வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்தே குறித்த போராட்டம் இடம் பெற்றது.

இவ்விடையம் தொடர்பாக பாதீக்கப்பட்ட மக்கள் மடு பிரதேசச் செயலாளரிடம் தமது கோரிக்கையினை முன் வைத்துள்ளனர். தமது பிரச்சினைக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஏ. ஸ்ரான்லி டி மேலை தொடர்பு கொண்ட போது அவர் கருத்து தெரிவிக்கையில்.

குறித்த காணி தொடர்பான பிணக்கு பல வருடங்களாக நீடித்த நிலையில் அன்மையில் எனது தலைமையில் மக்களின் ஆலோசனையின் பின்னர் அவர்களின் முன் மெழிவின் அடிப்படையில் தீர்வு வழங்கப்பட்ட நிலையில் இன்றைய தினம் திங்கட்கிழமை (25) மக்கள் போராட்டம் மேற்கொண்டதாக தெரிய வருகின்றது.

எனவே மக்களின் குழப்ப நிலை காரணமாக கடந்த கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை தற்காலிகமாக நிறுத்தி உயர் மட்ட முடிவுக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளது. என அவர் மேலும் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர்** (25-01-2021)










# நோய் எதிர்ப்பு சக்தி எங்கு கிடைக்கும்

நோய் எதிர்ப்பு சக்தி என்பது நாம் பிறக்கும் போதே நம்மடன் அதுவும் வந்து விடுகிறது. சிலருக்கு குறைவாகவும். சிலருக்கு மிக அதிகமாகவும் பிறவியிலேயே வந்து விடுகிறது. கரவுற்ற பெண்களுக்கு நல்ல சத்துள்ள ஆகரம் வைட்டமின் பி, கல்சியம், இரும்புச்சத்து. மினரல்கள், மைக்ரோ நியுட்ரியன்ஸ் எப்படும் தாது மற்றும் சத்துக்கள் நிறைந்த பழம், காய்கறிகள், புரதச்சத்து, கீரை, பருப்பு வகைகள். முட்டை பால் என கருவுற்ற பெண்கள் நிறைய எடுத்தால் பிறக்கும் குழந்தை நல்ல ஆரோக்கியத்துடன் நல்ல நோய் எதிர்ப்பு சக்தியுடன் பிறக்கும். இப்போ நோய் எதிர்ப்பு சக்தி வேண்டுமே என்று அலையத்தேவையில்லை.

வளர்ந்து விட்ட நமக்கு எதிர்ப்பு சக்தி குறைவு பற்ற எப்படி அறிவது? ஒருவருக்கு அடிக்கடி சளி பிடித்தாலோ. நோய் கிருமிகளின் தொற்றால் தோல் நோய்கள். புண் போன்றவை அடிக்கடி ஏற்பட்டாலோ உடம்பில் சீழ் பிடித்தல். அடிக்கடி காச்சல், இருமல் ஏற்பட்டாலோ நமக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைந்துள்ளது எனப் பொருள். நோய் சக்தியைப் பெருக்க.

வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப்போகும் என்பது பழமொழி மட்டமல்ல உண்மையும் கூட! அடிக்கடி சந்தோஷமாக சிரிப்பவர்களுக்கு மகிழ்ச்சியில் ஹார்மோன் நோய் எதிர்ப்பு நிறைய சுரக்கும் எனவே இந்த ஹார்மோன் நோய் எதிர்ப்பு சக்தியை உடலில் உருவாக்கும்.

நிறைய கீரை, பழங்கள், உலர் பழங்கள். உலர் கொட்டைகள். பால், தயிர். முட்டை. நாட்டுக் காய்கள் சாப்பிட்டால் உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கும். தற்போதைய காலத்தின் சூழலால் ஒருவர் தினமும் பூண்டு, இஞ்சி, மஞ்சல், கராம்பு, துளசி, வேப்பிலை. கற்பூரவல்லி இலை, சுக்கு, மிளகு,திப்பிலி, சித்தரத்தை, எலுமிச்சை, சீரகம், தேன் இவைகளை தொடாந்து சாப்பிட்டுவர இன்றைய கொரானாவில் இருந்து எங்களை காப்பாற்றிக் கொள்ளலாம். விலை கொடுத்து சக்தியை வாங்க முடியுமானால் இப்போ வரும் நோயிலிருந்தும் தப்பித்துக்கொள்ளலாம். சித்தர்கள் :உணவே மருந்து மருந்தே உணவு என்றனர்.

# ஐ.நா ஆணையாளரது அறிக்கை தொடர்பில் நாடு கடந்த அரசின் பிரதமரின் நிலைப்பாடு என்ன?



எமது இலக்கினை நோக்கி உழைக்கும் போது படிப்படியாக ஒவ்வொன்றையும் கடந்து அதனை அடைய முடியும் என்பதற்கு சான்றாக ஐ.நா ஆணையாளருடைய அறிக்கை அமைவதோடு, தாயகமும், புலமும் ஒன்றாக அரசியல் ரீதியாக பயணிக்கும் போது அது ஒரு பலமான சக்தியாக திரண்டு வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு இருக்கின்றது என்பதனையும் இது காட்டியுள்ளது என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்திடம் சமர்பிக்கப்பட்டுள்ளதாக ஊடகங்களில் வெளிவந்த ஐ.நா ஆணையாளரது அறிக்கை தொடர்பில் கருத்தினை வெளியிடும் போதே இதனை தெரிவித்தள்ள பிரதமர் வி.உருத்திரகுமாரன், சிறிலங்காவை சர்வதேச குற்றிவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும் என்ற அவரது பரிந்துரை உற்சாகத்தை தருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் ஐ.நா ஆணயையாளரு அறிக்கையில் இலங்கையை சர்வதேச குற்றிவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும் என்ற பரிந்துரையே முதன்மையான தெரிவித்திருக்கின்றார். இதற்கு பின்னராகத்தான் பிற பரிந்துரைகளை முன்வைத்துள்ளார்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டுமென தமிழர்கள் பல ஆண்டுகளாக உழைத்து வந்துள்ளார்கள், அத்துடன் இலங்கையில் தமிழ் அரசியல் தலைவர்களும் கூட்டாக இதனை கோரியுள்ளதோடு, காணாமலாக்கப்பட்ட உறிவினர்கள் பாதிக்கப்பட்ட மக்களும் கோரியியுள்ளனர் "என அறிக்கையில் மனித உரிமைச்சபை ஆணையாளர் அதனை குறிப்பிட்டிருக்கின்றார். தெரிவித்துள்ளார்.

இந்த நிலைப்பாட்டுக்காக தமிழர்கள் நாங்கள் பல ஆண்டுகளாக உழைத்து வந்துள்ளோம்.

2015ம் ஆண்டு நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் சிறிலங்காவை சர்வதேச குற்றிவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டி மில்லியன் கையெழுத்து போராட்டம் ஒன்றினை நடத்தியிருந்தது. அவ்வேளையில் தாயக மக்கள் உட்பட 1.5 மில்லியன் பேர் கையொப்பமிட்டிருந்தார்கள். அதுவொரு முக்கியதொரு தொடக்கம். அதனைத் தொடர்ந்து 2019ம் ஆண்டு சர்வதேச சட்டவாளர்கள் ஆணையம் சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில சிறிலங்காவை பாரப்படுத்தச் சொல்லியிருந்தது. அடுத்து மனித உரிமைச்சபையின் முன்னாள ஆணையாளர் உசேன், தனது அறிக்கையில் சர்வதேச குற்றிவியல் நீதிமன்றத்தில் சிறிலங்காவை பாரப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை தமிழர்களில் ஒரு தரப்பிடம் வலுவாக காணப்படுகின்றது என சுட்டிக்காட்டியிருந்தார்.

இன்று ஐ.நா மனித உரிமைச்சபை ஆணையரர் தனது பரிந்துரையாக நேரடியாகவே இதனை தெரிவித்துள்ளார். இது எமது இலக்கினை நோக்கி உழைக்கும் போது படிப்படியாக ஒவ்வொன்றையும் கடந்து அதனை அடைய முடியும் என்பதற்கு சான்றாக ஐ.நா ஆணையாளருடைய அறிக்கை அமைவதோடு, தாயகமும், புலமும் ஒன்றாக அரசியல் ரீதியாக பயணிக்கும் போது அது ஒரு பலமான சக்தியாக திரண்டு வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு இருக்கின்றது என்பதனையும் இது காட்டியுள்ளது.

ஐ.நா மனித உரிமைச்சபை நாடுகளை நோக்கிய ஐ.நா ஆணையரது இந்த பரிந்துரையினை அந்நாடுகள் ஏற்றுக் கொள்ளுமா இல்லையா என்பது பூகோள அரசியலை சார்ந்து காணப்படுகின்றது. ஆணையாளது பரிந்துரையினை அந்நாடுகள் நிராகரிக்க முடியாது என்றே நம்புகின்றேன். அதற்கான நாம் உழைக்க வேண்டும். அந்த 47 நாடுகளில் முக்கியமான நாடுகளை அடையாளங்கண்டு கடுமையாக தமிழர் தரப்பு உழைக்க வேண்டும்.

குறிப்பாக ஐ.நா மனித உரிமைச்சபை ஆணையாளரது பரிந்தரையினை மையப்படுத்தியே பிரச்சாரங்களை தீவிரப்படுத்த வேண்டும்.

இதேவேளை ஆணையாளரது அறிக்கையில் நமக்கு முழுமையமான உடன்பாடு இல்லை. குறிப்பாக நடந்தேறிய பாரிய மனித உரிமைமீறல்கள் "மீளநிகழாமை" தொடர்பில் அங்கத்துவ நாடுகள் ஒரு பொறிமுறையினை உருவாக்க வேண்டும் என கோரியுள்ளார். ஆனால் எம்மைப் பொறுத்த வரையில் பாதிக்கப்பட்டவர்கள்தான் அந்த பொறிமுறையினை தீர்மானிக்க வேண்டும் என பிரதமர் வி. உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

# கோவிட்டால் உயிரிழந்தவர்களை வலிந்து எரியூட்டல்: இலங்கைக்கு ஐநா கடும் கண்டனம்

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)

கோவிட் தொற்றால் உயிரிழந்தவர்களின் உடல்களை வலிந்து எரியூட்டும் இலங்கை அரசின் கொள்கை மனித உரிமைகளை மீறும் செயலாகும் என்று ஐநா எச்சரித்துள்ளது. ஒரு இனம் சார்ந்த கொள்கை நிலைப்பாடாக அதுவுள்ளது ஏற்புடையதல்ல என்கிறது ஐநா அறிக்கை.

இது தொடர்பில் கடுமையான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள ஐநா மனித உரிமைகள் ஆணையத்தின் வல்லுநர் குழு இலங்கை அரசு இஸ்லாமியர்கள் மற்றும் இதர சிறுபான்மையினரின் நம்பிக்கைகளுக்கு எதிராக கோவிட்-19 தொற்றால் இறந்தவர்களின் உடல்களை தகனம் செய்வதானது ஏற்கனவே நிலவும் காழ்ப்புணர்ச்சி, சகிப்புத்தன்மை இல்லாத சூழல் மற்றும் வன்முறையை அதிகரிக்கக் கூடும் என்று தெரிவித்துள்ளது.

அவ்வகையில் கோவிட்-19 தொற்றால் மரணமடைந்தவர்களின் சடலங்களை இனியும் இலங்கை அரசு வலிந்து எரியூட்டுவது தொடர முடியாது என்று அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.




"கோவிட்-19 தொற்றால் உயிரிழந்தார்கள் என்று உறுதியாகவோ அல்லது சந்தேகத்திற்கிடமான சடலங்களை எரிப்பது மட்டுமே அதைக் கையாள ஒரே வழியென்று கருதி செயல்படுவது மனித உரிமைகளை மீறும் செயலாகும். இலங்கையிலோ அல்லது வேறு நாடுகளிலோ அவ்வகையில் இறந்தவர்களின் உடல்களைப் புதைப்பதன் மூலம் தொற்று நோய் பரவும் ஆபத்து அதிகமுள்ளது என்று எவ்விதமான அறிவியல் அல்லது மருத்துவ ஆதாரங்களோ இல்லை" என்று அந்த வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் 21ஆம் திகதி வரை கோவிட்-19 தொற்றால் இலங்கையில் 274 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் அதில் முஸ்லிம்கள் குறிப்பிட்ட அளவிலுள்ளனர் என்று அந்த அறிக்கை கூறுகிறது. அவை அனைத்தும் அரசால் கொண்டுவரப்பட்ட ஒரு சட்டத்திருத்தத்தின் மூலம் எரியூட்டப்பட்டன என்று ஐ நா மனித உரிமைகள் ஆணையரின் அலுவலக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

நோயால் பாதிக்கப்பட்டவர்களின் உடல்களைப் புதைப்பதன் மூலம் நிலத்தடி குடிநீர் மாசுபடக் கூடும் என்று அரசின் தலைமை தொற்றுநோய் வல்லுநர் கூறியதை அடுத்து சடலங்களை அவசியம் எரியூட்டுவது எனும் முடிவை அரசு எடுத்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் உலக சுகாதார அமைப்போ உடலை எரிக்கும் போது நோய்த் தொற்று பரவுவது தடுக்கப்படுகிறது என்று கூறுவதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை என்று கூறியுள்ளது. அதே போன்று இலங்கையின் பொதுச் சமூக மருத்துவ வல்லுநர்களும், இலங்கை மருத்துவர்கள் சங்கமும் கோவிட்-19 தொற்றால் உயிரிழந்தவர்களைப் புதைப்பது பொதுச் சுகாதாரக்கு கேடு ஏற்படுத்தும் என்பதற்கு ஆதாரம் ஏதுமில்லை என்று கூறியுள்ளது.

"பொதுச் சுகாதாரத்திற்கு சவால் விடும் கோவில்-19 தொற்று நோய் பரவல் குறித்து நாம் விழிப்பாக இருக்க வேண்டியது அவசியம் என்றாலும் உயிரிழந்தவர்களின் மாண்பை மதித்து இறந்தவர்களின் கண்ணியத்தை பேண வேண்டும், அவர்களது கலாச்சார மற்றும் மத சம்பிரதாயங்கள் அல்லது நம்பிக்கை ஆகியவை காக்கப்பட வேண்டும்" என்று அந்த வல்லுநர்கள் கூறியுள்ளனர்.

"காழ்ப்புணர்ச்சி, அதிதீவிர தேசியம் மற்றும் இனம் சார்ந்த முடிவு போன்றவற்றின் அடிப்படையில் பொது சுகாதாரம் குறித்த முடிவுகள் எடுக்கப்படுவதையும் அதை நடைமுறைப் படுத்துவதையும் நாங்கள் கண்டிக்கிறோம். அது நாட்டிலுள்ள முஸ்லிம்கள் மற்றும் இதர சிறுபான்மையினரை பழிவாங்கும் செயலாகும்" என்று அந்த வல்லுநர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர். "அரசின் அப்படியான செயல்பாடு ஏற்கனவே சிறுபான்மையினருக்கு எதிராக நிலவும் மனப்போக்கு, காழ்ப்புணர்ச்சி, இன முறுகல் மற்றும் மத ரீதியாகச் சகிப்புத்தன்மை இல்லாதது ஆகியவற்றை மேலும் அதிகரித்து, அச்ச உணர்வை விதைத்து. நம்பிக்கையின்மையைத் தோற்றுவித்து மேலும் வெறுப்பையும் வன்முறையையும் ஊக்குவிக்கும்" என்று அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.



அரசு இப்படியான கொள்கைகளை எடுப்பது ஏழைகள் மற்றும் பலவீனமானவர்கள் புறக்கணிக்கப்படுகிறோம் எனும் அச்சம் காரணமாக பொது மருத்துவ வசதிகளை அணுக முடியாத சூழலை ஏற்படுத்தக் கூடும் என்றும் தாங்கள் கவலைப்படுவதாகவும் அவர்கள் அந்த அறிக்கையில் கூறியுள்ளனர். இது அந்த தொற்று நோயைத் தடுப்பதில் பின்னடைவையும் ஏற்படுத்தக் கூடும் என்றும் அந்த வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

பல சந்தர்ப்பங்களில் தவறான பரிசோதனை முடிவு காரணமாகவும் இறந்தவர்களின் உடல்களை உறவினர்களின் அனுமதியின்றி எரியூட்டப்பட்ட சம்பவங்களும் நடந்துள்ளன என்று தமக்கு தகவல் கிடைத்துள்ளது என்று ஐநா மனித உரிமைகள் ஆணையத்தின் அந்த வல்லுநர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நோய்த் தொற்று காரணமாக உயிரிழந்தவர்களைப் புதைக்கும் உபாயங்களை ஆராயுமாறு நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும் சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளதையும் தங்கள் கவனத்தில் எடுத்துள்ளதாக அந்த ஐந்து வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். இறந்தவர்களைப் புதைப்பது அல்லது எரியூட்டுவது ஆகிய இரண்டு வழிகளையும் ஆராயுமாறு அரசால் நியமிக்கப்பட்ட வல்லுநர் குழுக்கள் தெரிவித்தாலும் அது புறந்தள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது என்று அவ்வல்லுநர்கள் கூறுகின்றனர்.

எனவே "கோவிட் தொற்றால் மரணமடைந்தவர்களை வலிந்து தகனம் செய்யும் நடைமுறையை உடனடியாக நிறுத்த வேண்டுமென்று நாங்கள் இலங்கை அரசை காத்திரமாக வலியுறுத்துகிறோம். மேலும் அது தொடர்பில் தவறான தகவல் பரவுதல் மற்றும் வெறுப்புணர்வை தூண்டும் பேச்சுக்கள் ஆகியவற்றையும் தடுத்து நிறுத்த அனைத்து நடவடிக்கையும் எடுக்கும்படி நாங்கள் கோருகிறோம்" என்று அந்த ஐநா மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அந்த ஐவர் வல்லுநர் குழு ஆழமாகவும் உறுதியாகவும் கூறியுள்ளது.

# அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு அளிக்க மதத் தலைவர்கள் வேண்டுகோள்

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)

இலங்கையின் வடக்கிலுள்ள மதத் தலைவர்கள் ஒருங்கிணைந்து அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு அளிக்க கோரி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

தமது ஒற்றுமையை வெளிப்படுத்தும் விதத்தில் அவர்கள் இணைந்து எழுதியுள்ள கடிதத்தில் இந்த அரசியல் கைதிகள் மிக நீண்ட காலமாக சிறையிலுள்ளனர் என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பொது நோக்கம் ஒன்றுக்காக இணைந்து ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ள இந்து, பௌத்த, முஸ்லிம் மற்றும் கிறிஸ்துவ மதத் தலைவர்கள் அந்தக் கைதிகளின் பெற்றோர், மனைவிமார் மற்றும் பிள்ளைகளின் "கண்ணீர் மற்றும் துயரங்களால்" தாங்கள் மிகவும் வேதனையடைந்துள்ளதாக கூறியுள்ளனர்.




யாழ் ஸ்ரீ நாக விகாரையின் வண. மீகாஹஜுதர ஸ்ரீ விமல தேரர், சிவகுரு ஆதீனம் தவத்திரு வேலன் சுவாமிகள், நல்லை ஆதீன தலைமை சிவாச்சாரியார் கலாநிதி ஜெகதீஸ்வரக் குருக்கள், வண. அருட்தந்தை ஜோசப்தாஸ் ஜெபரட்ணம் குரு முதல்வர் யாழ் மறை மாவட்டம், எம் என் எம் இர்ஃபான் (நூரி) தலைவர் அகில இலங்கை ஜமாயத்துல் உலமா யாழ்ப்பாணம்ஃ கிளிநொச்சிப் பிரிவு மற்றும் வண. அருட்தந்தை மங்களராஜா தலைவர் நீதி மற்றும் சமாதானத்துக்கான குழு, யாழ் மறை மாவட்டம் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் முன்னர் எப்போதையும்விட கொரோனா தொற்று காலத்தில் அந்த அரசியல் கைதிகளின் விடுதலை மிகவும் அத்தியாவசியமானது என்று வலியுறுத்தியுள்ளனர்.

ஜனாதிபதிக்கு மிகவும் உருக்கமாக எழுதியுள்ள அந்தக் கடிதத்தில் அந்தக் கைதிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் துயரங்கள் குறித்து தமது ஆழ்ந்த வேதனையை வெளிப்படுத்தியுள்ளனர்.

"குடிமக்களின் ஒரு பகுதியினர், அவர்கள் எவ்வளவு குறைந்த அளவிலிருந்தாலும் சரி, அதீத கொடுமைகளையும் மன அழுத்தங்களையும் எதிர்கொள்ளும் போது, இதர பொது மக்கள் பாராமுகமாக இருக்க முடியாது" என்று அவர்கள் கூறியுள்ளனர்.

ஆயுள் தண்டனை மற்றும் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் கூட நாட்டில் பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்படுகின்றனர் என்று அந்த மத குருமார்கள் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டுகின்றனர்.

"இந்த அனுகூலங்கள் துரதிர்ஷ்டமான இந்த அரசியல் கைதிகளுக்கு கிடைப்பதில்லை என்பது குறித்து நாங்கள் மிகவும் வருந்துகிறோம்" எனவும் அந்த ஆறு குருமார்கள் தெரிவித்துள்ளனர்.



சில அரசியல் கைதிகள் 8-10 ஆண்டுகளும், மேலும் சிலர் 10-15 ஆண்டுகளாகச் சிறையில் வாடுவதையும் சுட்டிக்காட்டியுள்ள அந்த மத குருமார்கள், அவர்களின் குடும்பங்கள் சொல்லொணா துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள் என்று தமது கடிதத்தில் கூறி, உடனடியாக அவர்களை விடுவிக்கக் கோரியுள்ளனர்.

சிறைகளில் 4000 பேருக்கும் மேலானவர்கள் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அதில் ஆகக் குறைந்தது 16 பேருக்கு நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளது என்றும் கூறும் அவர்கள், அதனால் அவர்கள் மிகவும் விரக்தியும் மனச் சோர்வும் அடைந்துள்ளதாக வருந்தியுள்ளனர்.

அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டால் அவர்கள் சமூகத்துடன் நன்றாக இணைந்து கொள்வார்கள் என்று அந்த மதகுருமார்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.



"சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டால் அவர்களால் சமூகத்துக்கு எவ்வித தீங்கும் ஏற்படாது என்று நாங்கள் உண்மையாகக் கருதுகிறோம்".

அரசியல் கைதிகளின் விடுதலை நாட்டில் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை முன்னெடுக்க பெரிதும் உதவும் என்று எண்ணுவதாக அவர்கள் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஐநா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான விவாதம் வரவுள்ள நிலையில் அவர்களின் கடிதம் வெளியாகியுள்ளது. ஏற்கனவே ஐ நா மற்றும் இதர பன்னாட்டு அமைப்புகளின் கண்டனங்களை இலங்கை எதிர்கொண்டுள்ளது.

இலங்கை தொடர்ந்து "மோசமான மனித உரிமை மீறல்களில்" ஈடுபடுவதாக அந்த அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

# ட்ரம்புக்கு எதிராக அமெரிக்கசெனட் சபையில் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லா தீர்மானம் பிசு பிசுக்கின்றதா?



இந்த மாத ஆரம்பத்தில் அதாவது அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி ஜோ பைடன் அவர்களின் பதவியேற்புக்கு முன்னர், டொனால் ட்ரம்பின் தூண்டுதலால் அமெரிக்க பாராளுமன்றக் கட்டத்திற்குள் ஆர்ப்பாட்டக்காரர்கள் அத்துமீறி நுழைந்தது தொடர்பில் ட்ரம்ப் வன்முறையைத் தூண்டியதற்காக அவர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானம் பிரதிநிதிகள் சபையால் செனட் சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தில் தோல்வி அடைந்தால் ட்ரம்புக்கு எதிர்காலத்தில் அரச பதவிகளை வகிப்பதற்கு தடைவிதிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு எதிராக அந்நாட்டு செனட் சபையில் கொண்டுவரப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லா தீர்மானம் மீதான விசாரணையை முன்னெடுப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கிட்டத்தட்ட அனைத்து குடியரசு கட்சி வேட்பாளர்களும் வாக்களித்துள்ளனர்.

எனினும் இந்தத் தீர்மானத்திற்கு 50 ஜனநாயகக் கட்சி செனட் உறுப்பினர்கள் மற்றும் ஐந்து குடியரசு கட்சியினர் ஆதவை வெளியிட்டதால் இந்த விசாரணையை தொடரும் முயற்சி தோல்வி அடைந்துள்ளது. காரணம், இந்தத் தீர்மானம் வெற்றிபெற தேவைப்படும் மூன்றில் இரண்டு வாக்குகளை பெற்றுக்கொள்வதற்கு 17 குடியரசுக் கட்சியினரின் ஆதரவை பெறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதே ஆகும்.

# ரஸ்யஅதிபருடன் உரையாடிய அமெரிக்க ஜனாதிபதி பைடன், எதிர்க்கட்சி தலைவர் அலெக்சேயின் கைதுக்கும் கவலை தெரிவித்தார்

ரஷ்ய அரசியலில் புட்டினுக்கு எதிர்த் தரப்பு அரசியல்வாதியாக விளங்கும் அலெக்சே நேவல்னி அண்மையில் கைதுசெய்யப்பட்டது குறித்து, பைடன் கவலை தெரிவித்ததாக அமெரிக்க அதிகாரிகள் கூறினர். பெரிய அளவிலான இணைய ஊடுருவல் இயக்கத்தில் ரஷ்யாவின் ஈடுபாடு குறித்தும் பைடன், புட்டினுக்கு நெருக்குதல் அளித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் முதல்முறை தொலைபேசியில் உரையாடிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், தேர்தல் தலையீடு பற்றி எச்சரிக்கை விடுத்ததாகவும் மேலும் ட்ரம் காலத்தில் இடம்பெற்ற சில தர்க்கங்கள் தொடர்பாகவும் அறியப்படுகின்றது.

ரஷ்யாவில் தற்போது இடம்பெறும் எதிர்க்கட்சியனரின் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் அமெரிக்கா/ரஷ்யாவுக்கு இடையே கடைசியாக எஞ்சியிருக்கும் அணு ஆயுத ஒப்பந்தம் தொடர்பிலும் இந்த உரையாடலில் பேசப்பட்டுள்ளது.

புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்றிருக்கும் ஜோ பைடனுக்கு புட்டின் தமது வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டதாக இந்த தொலைபேசி உரையாடல் பற்றி ரஷ்யா வெளியிட்டிருக்கும் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்போது தொடர்ந்தும் தொடர்புகளை முன்னெடுத்துச் செல்ல இருவரும் இணங்கியுள்ளனர்.



முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் பதவிக் காலத்தில் அவரது நிர்வாகம் ரஷ்யாவுக்கு எதிராக கடும் நிலைப்பாடுகளை எடுத்தபோதும் டிரம்ப் சிலநேரம் சுமுகமான போக்கையே கடைப்பிடித்து வந்தார். புட்டினை பாதுகாத்து பேசுவதாக டிரம்ப் மீது குற்றச்சாட்டுகளும் எழுப்பப்பட்டன.

எனினும் ரஷ்ய எதிர்த்தரப்பு அரசியல்வாதி அலெக்சே நேவல்னி அண்மையில் கைதுசெய்யப்பட்டது குறித்து, பைடன் அக்கறை தெரிவித்ததாக அமெரிக்க அதிகாரிகள் கூறினர். பெரிய அளவிலான இணைய ஊடுருவல் இயக்கத்தில் ரஷ்யாவின் ஈடுபாடு குறித்தும் பைடன், புட்டினுக்கு நெருக்குதல் அளித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.



இரு நாடுகளுக்கும் இடையிலான அணுவாயுதக் கட்டுப்பாட்டு உடன்படிக்கை அடுத்த மாதம் காலாவதியாகும் முன்னர், அதனை நீடிப்பதற்கான பணிகளைத் துரிதமாக மேற்கொள்ள இரு நாட்டுத் தலைவர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர். இதுவே அமெரிக்காவும் ரஷ்யாவும் இணைந்து கொண்டுள்ள கடைசி, ஆயுதக் கட்டுப்பாட்டு உடன்படிக்கையாக உள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்தும் இரு நாட்டுத் தலைவர்களும் கலந்துபேசினர்.

"எங்களுக்கு அல்லது எங்கள் நட்பு நாடுகளுக்கு தீங்கு விளைவிக்கும் ரஷ்யாவின் நடவடிக்கைகளுக்கு பதிலளிக்கும் வகையில் அமெரிக்கா தனது தேசிய நலன்களைப் பாதுகாப்பதில் உறுதியாக செயல்படும் என்பதை ஜனாதிபதி பைடன் தெளிவுபடுத்தினார்" என்று அமெரிக்க அரசு சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்த தொலைபேசி உரையாடல் தொடர்பாக ரஷ்ய ஜனாதிபதி மாளிகையான கிரெம்ளின் வெளியிட்டுள்ள அறிக்கையில், பைடன் எழுப்பியதாக வெள்ளை மாளிகையால் குறிப்பிடப்பட்ட எந்த ஒரு விடயமும் கூறப்படவில்லை. "ரஷ்யாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உறவுகளை இயல்பாக்குவதன் மூலம் இரு நாடுகளின் நலன்களையும் உறுதிசெய்வது குறித்தும், உலக நாடுகளின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை பேணுவதில் இருநாடுகளுக்கும் உள்ள சிறப்பு பொறுப்பு குறித்தும் பேசினர்" என்று ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தைப்பூசத் திருவிழா: திருச்செந்தூரில் லட்சக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம்



திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு லட்சக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர். வேல் குத்தியும், காவடி எடுத்தும் பக்தர்கள் வேண்டுதலை நிறைவேற்றினர். தமிழகத்தில் பிரசித்தி பெற்ற திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் தைப்பூசத் திருவிழா இன்று கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இதையொட்டி அதிகாலை 3 மணிக்கு கோயில் நடை திறக்கப்பட்டு அதிகாலை 3.30 மணிக்கு விஸ்வரூப தீபாராதனை நடைபெற்றது.

தொடர்ந்து காலை 6 மணிக்கு உதயமார்த்தாண்ட தீபாராதனை நடைபெற்றது.காலை 8.45 மணிக்கு சுவாமி அஸ்திர தேவர் கடலில் புனித நீராடும் தீர்த்தவாரி நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து காலை 10 மணிக்கு உச்சிகால அபிஷேகம், அதனைத் தொடர்ந்து தீபாராதனை நடைபெற்றது. உச்சிகால தீபாராதனை முடிந்ததும் சுவாமி அலைவாயுகந்த பெருமான் சப்பரத்தில் 108 மகாதேவர் சன்னதி முன்பு எருந்தளினார்.மாலையில் மூலவருக்கு சாயரட்ச்சை தீபாராதனை ஆனதும் சுவாமி அலைவாயுகந்த பெருமானுக்கு உபயதாரர் சார்பில் அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை நடைபெற்றது. கரோனா தடுப்பு நடவடிக்கை மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் படி இந்த ஆண்டு தைப்பூச மண்டபத்துக்கு சுவாமி அலைவாயுகந்த பெருமான் செல்லாமல் உள்பிரகாரத்தில் எழுந்தருளினார்.

தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு தமிழகம் முழுவதும் இருந்து பாத யாத்திரையாக வந்த பக்தர்கள் உள்ளிட்ட லட்சக்கணக்கான பக்தர்கள் திருச்செந்தூர் கோயிலில் குவிந்தனர். பக்தர்கள் அதிகாலையிலேயே கடலில் நீராடி நீண்ட வரிசையில் காத்து நின்று சுவாமி தரிசனம் செய்தனர்.மேலும், பாத யாத்திரையாக வந்த பக்தர்கள் நீண்ட வேல்களால் அலகு குத்தியும், காவடி எடுத்தும், பால் குடம் எடுத்தும் வேண்டுதலை நிறைவேற்றினர்.

சில பக்தர்கள் கிரி பிரகாரத்தில் அங்கப்பிரதட்சணம் செய்து வழிப்பட்டனர். கோயில் கடற்கரையில் பக்தர்கள் அலைமோதியது. சிறுவர், சிறுமிகளும் காவடி எடுத்து வந்திருந்தனர்.பக்தர்களுக்கு அனுமதிகரோனா நோய்ப் பரவல் தடுப்பு நடவடிக்கையாக கடந்த சில மாதங்களாக கோயில் வளாகத்தில் மாலை 6 மணிக்கு மேல் பக்தர்கள் யாரையும் அனுமதிக்கவில்லை. வெளியூர்களிலிருந்து வரும் பக்தர்கள் கோயில் வளாகத்துக்கு வெளியே மட்டுமே தங்க அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று மாலையில் இருந்து கோயில் வளாகத்தில் லட்சக்கணக்கான பக்தர்கள் தைப்பூசத் திருவிழாவுக்காகக் குவிந்தனர். இந்த பக்தர்கள் நேற்று இரவு முதல் கோயில் வளாகத்தில் தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டனர். இதனால் வெளியே தங்குவதற்கு இடம் கிடைக்காமல் தத்தளித்த பக்தர்கள், கோயில் வளாகத்தில் அனுமதிக்கப்பட்டதால் மகிழ்ச்சியடைந்தனர்.

தைப்பூச விழாவை முன்னிட்டு மதுரை சரக டிஐஜி ராஜேந்திரன், தூத்துக்குடி எஸ்.பி. ஜெயகுமார் ஆகியோர் தலைமையில் ஏடிஎஸ்பி கோபி, ஏஎஸ்பி ஹர்ஷ்சிங் ஆகியோர் மேற்பார்வையில் போலீஸார் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.தைப்பூச விழாவுக்கான ஏற்பாடுகளை கோயில் தக்கார் கண்ணன் ஆதித்தன் மற்றும் இணை ஆணையர் (பொறுப்பு) கல்யாணி மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் செய்திருந்தனர்.

# எழுவர் விடுதலை; ஆளுநர் விரைவில் முடிவெடுப்பார்: உயர் நீதிமன்றத்தில் அரசு தகவல்



எழுவர் விடுதலை விவகாரத்தில் ஆளுநர் விரைவில் முடிவெடுப்பார் என உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு தெரிவித்தது. முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மதுரை மத்திய சிறையில் 27 ஆண்டுகளாக ஆயுள் தண்டனை அனுபவித்து வருபவர் அருப்புக்கோட்டையைச் சேர்ந்த ரவிச்சந்திரன். இவரை 2 மாதம் பரோலில் விடுதலை செய்யக் கோரி அவரது தாயார் ராஜேஸ்வரி உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் மனுத்தாக்கல் செய்தார். அந்த மனுவில், ''ரவிச்சந்திரன் 27 ஆண்டுகளாக சிறையில் உள்ளார்.

ராஜீவ் கொலையில் தொடர்புடைய ரவிச்சந்திரன் உட்பட 7 பேரையும் விடுதலை செய்வது தொடர்பான தமிழக அமைச்சரவைத் தீர்மானத்துக்கு ஆளுநர் ஒப்புதல் வழங்காமல் உள்ளார்.இந்நிலையில் கரோனாவால் ரவிச்சந்திரனை 3 மாத பரோலில் விடுதலை செய்யக் கோரி மனு அனுப்பினேன். ஆனால், மத்திய அரசின் சட்டத்தின் கீழ் ரவிச்சந்திரன் தண்டிக்கப்பட்டதால் பரோல் வழங்க முடியாது என சிறை நிர்வாகம் மறுத்தது. இதை நிராகரித்து ரவிச்சந்திரனை 2 மாத பரோலில் விடுதலை செய்ய உத்தரவிட வேண்டும்'' என்று கூறப்பட்டிருந்தது.இந்த மனு நீதிபதிகள் கல்யாணசுந்தரம், இளங்கோவன் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது.

மனுதாரர் சார்பில் வழக்கறிஞர் திருமுருகன் வாதிட்டார்.அரசு வழக்கறிஞர் வாதிடுகையில், ராஜீவ் கொலையில் தொடர்புடைய 7 பேரை விடுதலை செய்வது தொடர்பான அமைச்சரவைத் தீர்மானத்தின் மீது ஆளுநர் விரைவில் முடிவெடுப்பார் எனத் தெரிவிக்கப்பட்டது.இதையடுத்து விசாரணையை பிப். 5ம் தேதிக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

# பிப்.24 ஜெயலலிதா பிறந்தநாள் அரசு விழாவாக கொண்டாடப்படும் : சிலை திறப்பு விழாவில் முதல்வர் அறிவிப்பு

ஜெயலலிதாவின் சிலையை திறந்து வைத்த முதல்வர் பழனிசாமி அவருடைய பிறந்த நாளான பிப்ரவரி 24ம் நாள் அன்று ஒவ்வொரு ஆண்டும் அவருக்கு பெருமை சேர்க்கின்ற விதமாக ஜெயலலிதா பிறந்த நாளை அரசு விழாவாக கொண்டாடப்படும் என அறிவித்துள்ளார்.சென்னை, போயஸ் தோட்டத்தில் அமைந்துள்ள முன்னாள் முதல்வர் ஜெயலலிதா வாழ்ந்த அரசுடைமையாக்கப்பட்ட ''வேதா நிலையம்'' நினைவு இல்லத்தினை முதல்வர் பழனிசாமி இன்று திறந்து வைத்தார்.

பின்னர் தமிழ்நாடு உயர்கல்வி மன்ற வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் உருவச் சிலையைத் திறந்து வைத்தார். அவ்வளாகத்திற்கு ஜெயலலிதாவின் பெயர் சூட்டப்பட்ட கல்வெட்டையும் திறந்து வைத்தார்.இந்த நிகழ்ச்சியில் முதல்வர் எடப்பாடி பழனிசாமி பேசியதாவது:''ஆண்களுக்கு பெண்கள் சமம் என்று மகளிருக்கும் காக்கிச் சட்டை அணியச் செய்தார். மகளிர் காவல் நிலையங்களைத் திறந்தார். பெண் கமாண்டோ படையை அமைத்து உலகத்தையே தமிழகத்தின் பக்கம் உற்று நோக்கச் செய்தவர் ஜெயலலிதா.

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்த வழக்குகளை விசாரிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் மகளிர் விரைவு நீதிமன்றங்கள் அமைத்தவர்.அவர் வழியில் இந்தியாவிலேயே முதன்முதலாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்புப் பிரிவு என்னும் முன்னோடித் திட்டமாக தமிழ்நாட்டில் தமிழக அரசால் உருவாக்கப்பட்டு, சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. மேலும், பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பை உறுதி செய்ய காவலன் செயலி, மகளிர் உதவி எண் 181, குழந்தைகளுக்கான உதவி எண் 1098 போன்றவை மூலம் குற்றங்கள் தடுக்கப்பட்டுள்ளன.''மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா'' என்று பாடும் தமிழ்கூறும் நல்லுலகில், கிராமியக் கலை, எழுத்து,



பத்திரிகை, நீதிமன்றம், மருத்துவம் என அனைத்துத் துறைகளிலும் பெண்கள் வெற்றி பெற்று வருவது உள்ளபடியே மகிழ்ச்சியளிக்கிறது.தமிழ்நாட்டிலுள்ள பெரும்பாலான பெண்கள் ஜெயலலிதாவைப்போல் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை வெளிப்படுத்தியிருப்பது, ஒரு பெண் மாபெரும் சக்தியாக மாற முடியும் என்பதை பறைசாற்றுகிறது. இந்திய அரசியலில் பெண் தலைவர்கள், பெண் ஆட்சியாளர்கள் குறைவு என்ற போதிலும், அந்தக் குறைகளையெல்லாம் ஈடு செய்து மாற்று சக்தியாக விளங்கியவர் ஜெயலலிதா.

துணை முதல்வர் குறிப்பிட்டதைப் போல, 2011ல் ஜெயலலிதா தமிழகத்தின் முதல்வராக பொறுப்பேற்கின்ற போது, 32 சதவீதம் மாணவச் செல்வங்கள் உயர்கல்வி படித்துக் கொண்டிருந்தனர். இப்போது அவரின் கல்விக்கு அதிக ஒதுக்கீடு செய்து கல்வியில் புரட்சி ஏற்படுத்தியதன் விளைவாக தமிழகத்தில் உயர்கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கை சுமார் 49 சதவீதமாக உயர்ந்துள்ளது. இந்தியத் திருநாட்டிலேயே உயர்கல்வி படிப்பவர்களில் முதல் மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையைப் பெற்றிருக்கின்றது.

ஒரு தலைவனுக்கு உரிய ஆளுமைகளாக என்னென்ன கூறப்படுமோ அவை அத்தனையும் ஜெயலலிதாவின் இயல்பான குணங்களாக இருந்துள்ளது என்பது இன்றைய இளைய சமுதாயத்திற்கு ஒரு முன்னுதாரணம் ஆகும். இத்தகைய மாபெரும் மக்கள் தலைவருக்கு மரியாதை செலுத்தும் விதமாக, அவரின் தன்னலமில்லா வாழ்விற்குப் பொருத்தமாக, நேற்றைய தினம் மெரினா கடற்கரையில், மிகப்பெரிய நினைவு மண்டபம் திறக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, இன்று, ஆளுமை திறன்மிக்க, அச்சம் என்ற சொல் அறியாத, அவர் வாழ்ந்த போயஸ் கார்டனில் உள்ள ''''''வேதா நிலையம்'''' நினைவு இல்லத்தை இன்று நாங்கள் திறந்து வைத்திருக்கின்றோம். அந்த நினைவு இல்லத்தை லட்சக்கணக்கான மக்கள் பார்வையிட்டு, அவருடைய வாழ்க்கை வரலாற்றை தெரிந்து கொள்வதற்காக அதையும் நாங்கள் நிறைவேற்றி இருக்கின்றோம்.மேலும், ஜெயலலிதாவின் திருநாமத்தின் பெயரில் தமிழ்நாடு உயர்கல்வி மன்ற வளாகத்தில் பிரம்மாண்டமான அழகிய தத்ரூபமான அவரின் முழு திருவுருவச் சிலையை இன்றைக்கு நாங்கள் திறந்து வைத்திருக்கின்றோம். அவருக்கு பெருமை சேர்க்கின்ற அரசு இந்த அரசு என்பதை நினைவு கூற கடமைப்பட்டு இருக்கின்றேன்.

ஜெயலலிதாவின் திருவுருவச் சிலையை இங்கே சென்னையில் நாம் பிரம்மாண்டமாக அமைத்து திறந்திருக்கின்றோம். அவருடைய பிறந்த நாளான பிப்ரவரி 24ம் நாள் அன்று ஒவ்வொரு ஆண்டும் அவருக்கு பெருமை சேர்க்கின்ற விதமாக ஜெயலலிதா பிறந்த நாளை அரசு விழாவாக கொண்டாடப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.அதுசமயம், இந்த வளாகத்தில் நிறுவப்பட்ட அவரின் திருவுருவச் சிலைக்கு அரசின் சார்பாக ஒவ்வொரு ஆண்டும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படும் என்பதை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன்''. இவ்வாறு முதல்வர் பழனிசாமி அறிவித்தார்.

# இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என மனித உரிமை ஆணையர் பரிந்துரை!

கனடா- நக்கீரன்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை (ஐநாமஉபேரவை) அடுத்த மாதம் பெப்ரவரி 22 தொடங்கி மார்ச் 23 வரை அதன் 46 வது அமர்வு நடைபெறயிருக்கிறது. புதிய தீர்மானங்களை பட்டியலிடுவதற்கான காலக்கெடு மார்ச் 18 வியாழக்கிழமை நண்பகலில் இடம் பெறும். இலங்கை இந்த முறை நிகழ்ச்சி நிரலில் உள்ளது.

மொத்தம் 47 நாடுகளைக் கொண்ட ஐநாமஉபே 15 மார்ச், 2006 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. அதற்கு முன்னர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆ-ணையம் **(The United Nations Commission on Human Rights (UNCHR)** என்ற பெயரில் 1946 தொடக்கம் இயங்கி வந்தது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையர் **(Office of the United Nations High Commissioner for Human Rights, OHCHR)** என்பது பன்னாட்டுச் சட்டங்களுக்கு அமைய, 1948 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் மனித உரி-மைகள் பிரகடனத்திற்கு அமைய மனித உரிமைகளைப் பேணவும் அதன் மேன்மைக்காக உழைக்கவும் உருவாக்கப்பட்ட ஓர் ஐக்கிய நாடுகள் நிறுவன-மாகும்.

இந்த நாடுகள் சமமான புவியியல் பங்கீட்டை அடிப்படையாகக் கொண்டது. இருக்கைகள் பின்வருமாறு ஒதுக்கப்பட்டுள்ளன:

(1) ஆபிரிக்க நாடுகள் - 13
(2) ஆசியா - பசிவிக் நாடுகள் - 13
(3) இலத்தீன் மற்றும் கரிபீன் நாடுகள் - 8
(4) மேற்கு ஐரோப்பிய நாடுகள் - 7
(5) கிழக்கு ஐரோப்பிய நாடுகள் - 6



ஒவ்வொரு நாடும் 3 ஆண்டுகள் பதவியில் நீடிக்கலாம். எந்தவொரு நாடும் தொடர்ச்சியாக இரண்டு முறை பணியாற்றிய பின்னர் உடனடியாக மறுதேர்தலுக்கு நிற்கத் தகுதியற்றவை. இன்று ஐநாமஉ பேரவையில் இல் உறுப்பினர்களாக இருக்கும் நாடுகளும் அவற்றின் காலவதியாகிற காலமும் பின்வருமாறு:

2021 இல் - அர்ஜென்டினா, ஆஸ்திரியா, பஹாமாஸ், பஹ்ரைன், பங்களாதேஷ், பல்கேரியா, புர்கினா பாசோ, கேமரூன், செக்கியா, டென்மார்க், எரித்திரியா, பிஜி, இந்தியா, இத்தாலி, பிலிப்பைன்ஸ், சோமாலியா, டோகோ, உருகுவே.

2022 இல் - ஆர்மீனியா, பிரேசில், இந்தோனேசியா, மார்ஷல் தீவுகள், மவுரித்தேனியா, நமீபியா, நெதர்லாந்து, போலந்து, கொரியா குடியரசு, சூடான், வெனிசுலா (பொலிவரியன் குடியரசு).

2023 இல் - பொலிவியா, சீனா, கோட் டி ஐவோயர், கியூபா, பிரான்ஸ், காபோன், 2023, மலாவி, மெக்சிகோ, நேபாளம், பாகிஸ்தான், உருசிய கூட்டமைப்பு, செனகல், உக்ரைன், கிரேட் பிரிட்டன் மற்றும் வடக்கு அயர்லாந்தின் ஐக்கிய இராச்சியம், உஸ்பெகிஸ்தான்.

கடந்த காலங்களில் இலங்கை தொடர்பான தீர்மானங்களை ஐக்கிய இராச்சியம், கனடா, ஜெர்மனி, மொன்ரெனநீக்றோ, வடக்கு மசிடோனிய ஆகிய நாடுகள் முன்மொழிந்திருந்தன. அமெரிக்கா மனித உரிமைப் பேரவையில் இருந்து கடந்த யூன் 2018 இல் வெளியேறியது தெரிந்ததே. அமெரிக்காவின் இடத்தை ஐக்கிய இராச்சியம் மற்றம் கனடா நிரப்பியுள்ளன. ஐநா மனித உரிமை உயர் ஆணையருக்கு பல கடமைகள் உண்டு. அனைவருக்குமான மனித உரிமைகளை மேம்படுத்துவதும் பாதுகாப்பதும் அவரது பொறுப்பாகும். இவரது அலுவலகம் மனித உரிமைகள் தொடர்பான கடமைகளை நிறைவேற்றுவதில் அரசாங்கங்களுடன் இணைந்து செயல்படுகிறது. உலக-ளவில் மனித உரிமை மீறல்களை எதிர்கொண்டு இன்றைய மனித உரிமைச் சவால்களுக்கான பதில்களை அடையாளம் காணவும், முன்னிலைப்படுத்தவும், வளர்க்கவும் பாடுபடுகிறது.

மேலும் மனித உரிமைகள் ஆராய்ச்சி, கல்வி, பொதுத் தகவல் மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகளின் முக்கிய மையப் புள்ளியாகவும் உலகெங்கிலும் மனித உரிமைகளுக்கான களத்தை விரிவுபடுத்துவதற்காக பரந்த அளவில் நாடுகளுடன் இணைந்து செயல்படுகிறது.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான முதன்மைப் பொறுப்பு அரசாங்கங்களுக்கு இருப்பதால், மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் மற்றும் அவரது அலு-வலகம் அரசாங்கங்களுக்கு உதவிகளை வழங்குகின்றன. இதனால் உயர் ஆணையர் உறுதியளித்த சர்வதேச மனித உரிமைத் தரங்களை உயர்வுபடுத்த முடியும். நீதி நிருவாகம், சட்டமன்ற சீர்திருத்தம் மற்றும் தேர்தல் செயல்முறைகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு நிபுணத்துவம் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சிகள்



United Nations Human Rights High Commissioner Michelle Bachelet



TNA Leader MP R. Sampanthan



Foreign Secretary Admiral Prof. Jayanath Colombage

போன்றவற்றை அளிக்கிறது.

கடந்த செப்தெம்பர் 1 2018 அன்று ஐநா பொதுச்செயலாளர் அன்டோனியோ கட்டெரஸ் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணை-யராக மிச்செல் பச்சலெட் **(Michelle Bachelet)** அவர்களை நியமித்தார். அதற்கு முன்னர் இளவரசர் ஜீத் ராத் அல் ஹூசைன் அந்தப் பதவியில் நான்கு ஆண்டுகள் இருந்தார்.

மிச்செல் பச்சலெட் 29 செப்டம்பர் 1951 இல் பிறந்தவர். இவர், சிலி நாட்டின் சனாதிபதி பதவியை வகித்த முதல் பெண்மணி ஆவார். 2010 இல் சனாதிபதி பதவியில் இருந்து விலகிய பின்னர், உடனடியாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்படாத நிலையில், பாலின சமத்துவம் மற்றும் பெண்கள் அதிகாரம் பெறுவதற்காக புதிதாக உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் முதல் நிருவாக இயக்குநராக நியமிக்கப்பட்டார்.

பல்கலைக் கழக மட்டத்தில் இராணுவ மூலோபாயத்தைப் படித்த மருத்துவரான மிச்செல் பச்சலெட் நல்வாழ்வு அமைச்சராகவும் பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்திருக்கிறார். அவர் தன்னை ஒரு அஞ்ஞானவாதி **(agnos-tic)** என்று வருணிக்கிறார். தனது சொந்தத் தாய்மொழியான ஸ்பானிஷ் தவிர, ஆங்கிலம், ஜெர்மன் மற்றும் போர்த்துக்கீசிய மொழிகளைச் சரளமாகப் பேசக் கூடியவர்.

ஐநா மனித உரிமை அலுவலக உயர் ஆணையர் ஐநா அமைப்பு முழுவதற்கும் மனித உரிமைகளுக்காகப் பேசும் அதிகாரம் படைத்தவர் ஆவர். ஐநா மனித உரிமை உயர்ஆணையர் அலுவலகம் வணிக மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஐநா செயற்குழு மற்றும் சர்வதேச அரசு செயற்குழு ஆகியவற்றுடன் பணியாற்றுகிறது.

ஜெனீவாவில் அடுத்த மாதம் இடம்பெறவுள்ள ஐநாமஉ பேரவையின் 46 ஆவது அமர்வில் ஐநா சபையின் மனித உரிமைகள் உயர் ஆணையர் மிச்செல் பச்சலெட் இலங்கை குறித்த தனது அறிக்கையில் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளார். எதிர்பார்த்தது போலவே முன்னரைவிட இம்முறை அவர் 17 பக்க காரசாரமான அறிக்கை ஒன்றை இலங்கையின் வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்த்தனாவிற்கு அனுப்பி வைத்திருக்கிறார். அதில் ஏதாவது கருத்துப் பிழை அல்லது சட்டத் தவறுகள் இருந்தால் அதைச் சுட்டிக்காட்டலாம் என ஆணையர் தெரிவித்துள்ளார். அதற்கான பதில் இந்த வாரம் ஜெனீவாவுக்கு அனுப்பி வைக்கப்படும் எனத் தெரியவருகிறது.

பொதுவாக இதுபோன்ற அறிக்கை வெளிவராமல் இரகசியம் காக்கப்படுவது மரபாகும். ஆனால் வெளியுறவு அமைச்சு அதனை ஊடகங்களுக்குக் கசிய விட்டுள்ளது. அந்த அறிக்கையைப் பின்னர் படித்துவிட்டு மக்கள் அதிர்ச்சி அடைவதைத் தவிர்ப்பதற்காகவே அதனை முன்கூட்டியே வெளியுறவு கசிய விட்டுள்ளது என்கிறார்கள். அந்த அறிக்கையில்:

2015 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட 30/1 மற்றும் 40/1 தீர்மானங்களின் அடிப்படையில் மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும். முந்தைய அரசாங்கத்தின் கீழ் இந்தத் தீர்மானங்களுக்கு இலங்கை இணை அனுசரணை வழங்கியிருந்தது. இருப்பினும், சனாதிபதி கோட்டாபய இராசபச்ச தலைமையிலான புதிய அரசாங்கம் கடந்த ஆண்டு மார்ச் மாதம் இணை அனுசரணையில் இருந்து விலகியது. அப்படி இலங்கை விலக்கிக் கொண்டாலும் தீர்மானங்கள் உயிர்ப்போது தொடர்ந்து இருக்கும்.

2030 நிகழ்ச்சி நிரலுக்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை உயர் ஆணையர் வரவேற்கிறார், அமைதி கட்டமைத்தல் மற்றும் மறுசீரமைத்தல் போன்ற சில நடவடிக்கைகளைத் தொடர வேண்டும் என்கிறார்.

ஆனால், இலங்கை நல்லிணக்கத்தை உறுதிசெய்து, நிறுவனமயமாக்கப்பட்ட மற்றும் முறையான தண்டனையற்ற கலாசாரத்தைத் திறம்பட நிவர்த்தி செய்தால் மட்டுமே நிலையான வளர்ச்சி மற்றும் அமைதி-யை அடைய முடியும்.



எவ்வாறாயினும் தீர்மானம் 30/1 மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கான ஆதரவைத் திரும்பப் பெற்றதன் மூலமும், அந்தத் தீர்மானத்தின் முழு அளவிலான அர்த்தமுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவ-றியதன் மூலமும், உள்நாட்டுப் பொறிமுறை மூலமாக உண்மையை வெளிக்கொணர்வதற்கான சாத்தியப்பாட்டை அரசாங்கம் பெருமளவில் மூடிவிட்டது என்கிறார்.

அத்துடன், அண்மைக்காலமாக போக்குகளைப் பார்க்கும்போது, அரசாங்கத்தின் புதிய முயற்சிகளில் முன்னேற்றம் உட்பட இலங்கையில் மனித உரிமைகள் நிலைமையைக் கண்காணிப்பதை மேம்படுத்தவும், பொறுப்புக்கூறல் விடயங்களை முன்னேற்றுவதற்கான ஒரு ஒத்திசைவான மற்றும் பயனுள்ள திட்டத்தை வகுக்கவும் சர்வதேச மட்டத்தில் மனித உரிமைகள் பேரவையை உயர் ஆணை-யர் அழைக்கிறார்.

குற்றவியல் பொறுப்புணர்வை முன்னெடுப்பதற்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண நடவடிக்கைகளை வழங்குவதற்கும் உறுப்பு நாடுகளுக்கு பல கடமைகள் உள்ளன.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பரிந்துரைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு மட்டுமல்லாமல், இலங்கையில் உள்ள அனைத்துத் தரப்பினரும் செய்த குற்றங்களை விசாரிப்பதற்கும், வழக்குத் தொடுப்பதற்கும் உறுப்பு நாடுகள் தீவிர நடவடிக்கையைத் தொடர வேண்டும். **(https://www.aljazeera.com/news/2021/1/27/un-rights-chief-seeks-sanctions-against-sri-lankan-generals-afp)**

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு முன் நிறுத்தி போர்க் குற்றம், மனித உரிமை மீறல் மற்றும் மானிடத்துக்கு எதிரான குற்றம் இழைத்தவர்களைத் தண்டிக்கப்பட வேண்டும் என்பது தமிழர்களது நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகிறது.

ஐக்கிய நாடு பாகாப்புச் சபையில் 15 உறுப்பு நாடுகள் இருக்கின்றன. அதில் சீனா, உருசியா உட்பட ஐந்து நாடுகளுக்கு தடுப்பு (வீட்டோ) உரிமை இருக்கிறது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு முன் நிறுத்தப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை சீனா தனக்குள்ள தடுப்பு வாக்கு மூலம் தோற்கடிக்கும் என்பதுதான் யதார்த்தம். ஏற்கனவே சீனா, இலங்கையைப் பாதுகாக்கும் எனக் கூறிவிட்டது. இருந்தும் அமெரிக்கா, ஐக்கியராச்சியம் மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகள் முயற்சித்துப் பார்க்கலாம்.

தீர்மானம் வெற்றிபெறா விட்டாலும் இலங்கையை ஒரு உளவியல் ரீதியான தாக்குதலுக்கு உட்படுத்தலாம்.

# தமிழ்நாட்டில் தவிக்கும் ஈழ அகதிகளை மீட்டெடுக்க யார் வருவார்?

- யாழ்ப்பாணத்திலிருந்து விசாகன்



இலங்கையில் இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான அடக்கு முறைகள் அதனைத் தொடர்ந்து ஆரம்பமான விடுதலைப் போராட்டம் என்பனவே எமது வடக்கு கிழக்கு பிரதேசங்களிலிருந்து இலட்சக் கணக்கான மக்களை புலம் பெயர வைத்தன என்று கூறுவதில் மாற்றுக் கருத்தக்களே தோன்ற முடியாது. எவ்வளவிற்கு போராட்டங்களினாலும் இராணுவ மட்டும் சிவில் அடக்கு முறைகளினாலும் துன்புறுத்தல்களும், அச்சமும், சொத்துக்கள் இழப்பும், தாக்குதல்களினால் அப்பாவி மக்களும் உயிர் துறக்கின்ற சம்பவங்களும் தொடர்ச்சியாக இடம்பெற்றதனால், தமிழ் மக்கள் இடம்பெயரத் தொடங்கினார்கள்.

இவ்வாறு இலங்கையை விட்டு பல்வேறு வழிகளையும் மார்க்கங்களையும் பயன்படுத்தி வெளியேறத் தொடங்கினார்கள். குறிப்பிட்ட எண்ணிக்கையினர். விமான நிலையங்கள் ஊடாக சட்டரீதியான பயணங்களை மேற்கொண்டார்கள். சில கடல் மார்க்கமாக சட்டத்திற்கு முரணான பயணங்களை மேற்கொண்டார்கள். சிலர் விமான நிலையங்களுக்கு ஊடாக வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டாலும், சட்டத்திற்கு முரணான வகையில் பத்திரங்களையும் கடவுச்சீட்டுக்களையும் பயன்படுத்தி நாட்டை விட்டு வெளியேறினார்கள்.

இப்படியாக இலட்சக்கணக்கானவர்கள் பல்வேறு வகையான பயணங்கள் மூலம் இலங்கையை விட்டுச் சென்றாலும், அவர்கள் அனைவருக்கும் பொதுவான காரணம் ஒன்றாகவே இருந்தது. "இங்கு இந்த பிரச்சனைகளுக்கு மத்தியில் வாழ்ந்து உயிரையும் உடமைகளையும் உறவுகளையும் இழப்பதிலும் பார்க்க, எங்கேயாவது ஒரு நாட்டிற்கு போய் அங்கு அகதியாய் வாழ்ந்தாலும் பரவாயில்லை" என்ற ஓரே தூர நோக்கு தான் அவர்கள் தாயக மண்ணை விட்டு நீங்கிச் செல்ல தூண்டியது என்றே கூறலாம்.

சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்த இந்த "அகதிப் பயணங்கள்" இப்போது போரும் போராட்டமும் அற்றுப் போன மண்ணிலிருந்து இன்னும் தொடங்குகின்றனவா என்ற கேள்வியை யாராவது கேட்டால், அதற்கு இல்லை என்ற பதிலும் உடனே வராது.

போராட்டங்கள் மற்றும் உயிரிழப்புக்கள் காரணமாக பிறந்த மண்ணை விட்டு நீங்கியவர்கள் எங்கே சென்றார்கள் என்பதை நாம் ஆராய்ந்தால், அவர்கள் வெவ்வேறு நாடுகளுக்கும் கண்டங்களுக்கும் தான் சென்றுள்ளார்கள் என்பது தெரியவந்தது. குறிப்பாக மேற்குலக நாடுகளை நோக்கி எமது உறவுகள் சென்றமைக்கு காரணம், யுத்தமும் போராட்டமும் ஆரம்பிக்கும் முன்னரேயே எமது மக்கள் பலர் வெளிநாடுகளுக்குச் சென்று கல்வி கற்று உயர்ந்த நிலையிலிருந்தார்கள். அவர்களது வழிகாட்டலில் ஆயிரக்கணக்கானவர்கள் மேற்குலக நாடுகளை நாடிச் சென்றார்கள். அதற்கு இன்னும் சில காரணங்களும் இருந்தன.

வெளிநாடுகள் சிலவற்றில் நியாயமான காரணங்களோடு அகதிகளாகச் சென்றவர்களை சில வருடங்கள் செல்ல அந்த நாட்டின் நிரந்தர பிரஜைகளாகவும் அதனைத் தொடர்ந்த குடியுரிமை பெற்றவர்களாகவும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியற் சட்டங்கள் நடைமுறையில் இருந்தன. அதோடு ஆங்கிலம் போன்ற மொழிகள் அரச மொழிகளாக இருக்கும் நாடுகளில் இலகுவாகக் கல்வி கற்று பதவிகளில் அமர்ந்து வாழ்க்கையை சீராக்கிக் கொள்ளலாம் என்ற எதிர்பார்ப்பு.

இவ்வாறாக எமது தாயகப் பிரதேசமான வடக்கு கிழக்கு என்னும் தமிழர் நிலத்திலிருந்து கனடா, இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்சு, சுவிற்சலாந்து, அவுஸ்த்திரேலியா, நோர்வே, டென்மார்க், பெல்ஜியம், இத்தாலி, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு அகதிகளாக சென்றவர்கள் அங்கு அகதி அந்தஸ்த்து வழங்கப்பெற்று பின்னர் பல சிரமங்களை அனுபவித்து தற்போது அவ்வாறு சென்றவர்களில் பெரும்பாலானவர்கள் நிரந்தர வதிவிட உரிமை பெற்று பின்னர் அந்தந்த நாடுகளின் குடியுரிமை பெற்று மகிழ்ச்சியுடனும் சுதந்திரமாகவும் வாழ்ந்த வருகின்றார்கள்.

ஆனால் நாட்டை விட்டு வெளியேறிவர்களில் போதிய பொருளாதார வசதிகள் மற்றும் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோரின் உதவிகள் போதியளவு இல்லாதவர்கள் சட்டவிரோத பயணங்களை மேற்கொண்டு இந்தியாவில் தமிழ் நாட்டுக் கரைகளை சென்றடைந்தார்கள். இதில் ஆச்சரியம் என்றவென்றால் நாம் முன்னர் குறிப்பிட்டது போன்று, நாற்பது வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்த தமிழ்நாட்டிற்கான படகுப் பயணங்கள் இன்னும் தொடர்கின்றன என்றால், அது எமக்கு பல விடயங்களைச் சுட்டிக்காட்டுகின்றது என்பதே உண்மை.



இந்தக் கட்டுரையின் நோக்கம் இந்தியாவின் தமிழ்நாட்டில் பல ஆண்டுகளாக ஈழ அகதிகள் என்று தினமும் அழைக்கப்படும் எமது மக்களைப் பற்றிய அக்கறை கொண்ட ஒரு பார்வையும் பரப்புரையும் தான். தங்கள் பொருளாதார பலத்தின் அடிப்படையில் படகுப் பயணங்களை மேற்கொண்டு தமிழ் நாட்டின் இராமேஸ்வரம் போன்ற கரைகளில் நம்பிக்கைகளுடன் கால் பதித்து, எமது மொழி காற்றோடு கலந்து நிற்கும் மண்ணல்லவா? அந்த மண்ணும் மக்களும் எம்மைக் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கையோ தங்கள் புதிய வாழ்க்கையை ஆரம்பித்தவர்கள் எமது தமிழ்நாட்டில் தொடர்ந்து வாழ்ந்து வரும் உறவுகள். அவர்களை "அகதிகள்" என்று குறித்து எழுதவே விரல்கள் நடுங்குகின்றன. மனச்சாட்சி எச்சரிக்கின்றது.

ஒரே காலத்தில், ஓரே காரணத்திற்காக தங்கள் மண்ணை விட்டு நீங்கிச் சென்றவர்கள் தமிழ்நாட்டில் மட்டும் தொடர்ச்சியாக அகதிகள் என்ற அந்தஸ்த்து இல்லாத மனிதர்களாக முகாம்களிலும் தனியார் வீடுகளிலும் தங்கள் வாழ்வின் நாட்களை கழிக்கின்றார்களே. இவர்களை யார் கவனிக்கின்றார்கள் என்று ஆராய்ந்தோம். மகிழ்ச்சி தரக்கூடிய தகவல்கள் எதுவுமே எமக்கு கிட்டவில்லை.

தமிழ்நாட்ல் தற்போது ஒரு இலட்சத்திற்கும் அதிகமான ஈழ அகதிகள் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களை கண்காணிக்கும் அல்லது பராமரிக்கும் பொறுப்பு இந்திய மத்திய அரசின் கீழ் உள்ள சில நிறுவனங்களினால் தான் கவனிக்கப்படுகின்றது என்ற தகவல் வெளிப்படையான ஒன்றே. இத்தனை ஆண்டுகள் அந்த நாட்டில் வாழும் எம் உறவுகளுக்கு சகல வாய்ப்புக்களைம் சலுகைகளையும் அனுபவிக்கக் கூடிய அந்தஸ்த்து இன்னும் வழங்கப்படவில்லை. இந்தியக் குடியுரிமை பெற்றவர்களாக அவர்கள் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசு நிராகரித்து வருகின்றது.

ஆனால் ஆப்கானிஸ்த்தான் பங்களாதேஸ் போன்ற நாடுகளிலிருந்து அகதிகளாக இந்தியாவிற்கு வந்த சீக்கியர்கள், பௌத்தவர்கள், ஜெயின் இனத்தவர்கள், கிறிஸ்த்தவர்கள் ஆகியோருக்கும் இந்திய குடியுரிமையை வழங்க அந்நாட்டுச் சட்டத்தில் இடமிருப்பதாகக் கூறி தற்போது அந்த நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நான்கு தசாப்பத்திற்கு மேலாக இந்தியாவின் ஒரு மாநிலமாக விளங்கும் தமிழ் நாட்டில் சிரமங்களை பல சிரமங்களை அனுபவித்தும் கடுயாக உழைத்தும் வாழும் ஈழத் தமிழ் மக்களுக்கு குடியுரிமை அந்தஸ்த்து வழங்கப்படுவது மறுக்கப்படுகின்றது. அந்த மக்களை இந்தியா மட்டும் புறக்கணிக்கவில்லை. மாறாக அவர்களோடு ஒரே மண்ணில் வாழ்ந்த தமிழ் மக்களாகிய நாமும் புறக்கணிக்கின்றோம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.



எமது ஈழத்து உறவுகளில் பத்து இலட்சத்திற்கும் அதிகமான மேற்குலக நாடுகளில் வாய்ப்புக்கள் வசதிகளோடு வாழ்ந்து வருகின்றார்கள். பொருளாதாரத்திலும், கல்வியிலும், சமூக மட்டத்திலும் அரசியல் மட்டத்திலும் செல்வாக்குள்ளவர்களாக பிரகாசிக்கின்றார்கள். அவர்களின் ஒரு சிறுபகுதியினராவது ஒன்றாக இணைந்து தமிழ்நாட்டில் உள்ள எமது உறவுகளின் வாழ்வில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியாதா என்று சிந்திக்க வேண்டும் அல்லவா, இதற்காக அமைப்பு ரீதியாக எமது புலம்பெயர் தேசத்து உறவுகள் முன்வரவேண்டும் என்ற வேண்டுகோளையே இந்தக் கட்டுரை மூலம் முன்வைக்க விரும்புகின்றோம்.

தமிழ்நாட்டில் உள்ள ஒரு இலட்சத்திற்கும் சற்று அதிகமான எமது உறவுகளில் அறுபதாயிரம் பேர் முகாம்களில் வாழுகின்றனர். நாற்பதாயிரம் பேர் முகாம்களுக்கு வெளியில் வாழ்ந்து வருகின்றார்கள். ஆனால் வெயில் வாழ்ந்து வருகின்றவர்கள் கூட எவ்வளவுதான் முன்னேறியிருந்தாலும் அவர்களை அரசாங்கம் கண்காணித்த வண்ணம் அவர்களது வாழ்வுச் சுதந்திரம் மனித உரிமைகள் ஆகியவை தொடர்பான அச்சுறுத்தல்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன என்றும் அறியப்படுகின்றது. மேலும் சுமார் 25000 பிள்ளைகள் தமிழ்நாட்டில் பிறந்தாலும் அவர்களுடைய பிறப்புப் பதிவுகளும் சீராகவே இல்லை.

ஆனாலும் தமிழ்நாட்டில் வாழும் ஈழ மக்களுக்கு இலவச கல்வி,மருத்துவம் மற்றும் பங்கீட்டு உணவுப் பொருட்கள் ஆகியன வழங்கப்பட்டாலும் அரசாங்க தொழில் பெறும் வாய்ப்புக்கள் அற்றவர்களாகவே துன்புறுத்தப்படுகின்றார்கள். சில வருடங்களுக்கு முன்னர் மத்திய அமைச்சர் ஒருவர் ஈழ அகதிகளுக்கு குடியுரிமை வழங்கும் வகையில் தமிழ் நாட்டு முதலமைச்சர் ஆராய்ந்து பரிந்துரை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார. பிரதமர் மோடி அவர்களும், இந்தியாவில் வாழும் குடியுரிமை பெறாதவர்களுக்கு இந்திய அரசு குடியுரிமை வழங்கும் போது, அவர்களது மதம் மற்றும் மொழி போன்ற விடயங்கள் கருத்தில் எடுக்கக் கூடாது என்று பணிப்புரையை வழங்கியிருந்தார்.

எனினும் தமிழ்நாட்டில் ஈழ அகதிகள் என்னும் அவப்பெயரோடு வாழ்ந்து வரும் எமது உறவுகளை அங்கிருந்து மீட்டெடுக்க அல்லது அங்கு குடியுரிமை அந்தஸ்த்து பெற்று மரியாதையுடன் வாழ இந்திய மத்திய அரசோடு காத்திரமான தொடர்புகளை ஆரம்பித்து நல்லதோர் தீர்வைப் பெற புலம்பெயர் நாடுகளிலுள்ள புத்திஜீவிகள் மற்றும் பலமிக்கவர்கள் ஒன்றிணைந்து செயற்படும் நாளுக்காக காத்திருக்கின்றோம். அகதிகள் என்ற பதம் ஈழத்தமிழர்களுக்கு ஒரு பரிதாபத்திற்குரிய பெயராகவே ஆரம்பத்தில் கணிப்பிடப்பட்டது. ஆனால் உலகில் பல நாடுகளிலும் ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ள எதேச்சதிகார சக்திகளினாலும் முதலாளித்துவத்தின் சதிகளினாலும் மக்கள் தொடர்ந்தும் அகதிகளாக்கப்பட்டே வருகின்றனர். எனினும் எமது தமிழ்நாட்டு ஈழ அகதிகளின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும்.

# கனடா உதயன்

25th ANNIVERSARY www.uthayannews.ca UTHAYAN உதயன்

## வெள்ளி விழா ஆண்டு 2021

உலகளாவிய மாணவர்களுக்கான இணையவழி ஊடான

# பேச்சுப் போட்டி

POWERED BY
VIBRANT HOSPITALITY GROUP
OVER 25 YEARS IN THE HOSPITALITY INDUSTRY
OUR EXPERTISE
CONSTRUCTION & DESIGN
OPERATIONS
REVENUE MANAGEMENT
SALES & MARKETING
HUMAN RESOURCES
Shankar Nallathamby, CHA
Director
shankar@vhgcanada.com
www.vibranthospitalitygroup.com
Toll free: 1 888 674 7770 | Local: 905 760 1509

## நான் விரும்பும் அரசியல் தலைவர்

இங்கு காணப்படும் தமிழ்த் தலைவர்களிலிருந்து தங்களுக்கு பிடித்தமான ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரைப் பற்றி **5 நிமிடங்களுக்கு** மேற்படாமல் பேச வேண்டும். போட்டி **ZOOM** செயலியூடாக **பெப்ரவரி 27. 28 தினங்களில்** நடைபெறும். கனடா, இந்தியா, அமெரிக்கா, மற்றும் இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நடுவர்கள் வெற்றியாளர்களை தேர்ந்தெடுப்பார்கள். இவர்களோடு கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் சேர்ந்து எடுக்கும் இறுதி முடிவிற்கு ஏற்பவே பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.



## நிபந்தனைகள்

1. உலகின் எப்பாகத்திலும் வாழும் 20 வயதிற்கு உட்பட்ட தமிழ் பேசும் மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம் (வயதை உறுதிப்படுத்தும் பத்திரம் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்).

2. இங்கு காணப்படும் தலைவர்களில் தாம் விரும்பும் ஒருவரைப் பற்றி மட்டும் ஐந்து நிமிடத்திற்கு மேற்படாமல் பேசவேண்டும்

3. போட்டிக்கான உரையை அவர்களாகவோ அன்றி மற்றவர்களின் உதவியுடனோ தயாரிக்கலாம்.

4. இறுதிப் போட்டிக்கு முன்பதாக தேவையேற்படின் முதற்சுற்றுப் ரேபட்டியில் பங்குபற்றவும் தயாராக இருக்க வேண்டும்.

5. போட்டி இடம்பெறும் இரண்டு நாட்களில் ஏதாவது ஒரு நாளில் போட்டியில் பங்கு பற்ற தயாராக இருக்க வேண்டும்.

6. பேச்சுப் போட்டியில் பங்கு பற்ற விரும்புவோர் பின்வரும் விபரங்களை uthayannews@yahoo.com என்னும் மின்னஞ்சலுக்கோ அன்றி 1 (416) 732 1608 / 1 (416) 587 0552 என்னும் இலக்கத்தில் WhatsApp இற்கோ அனுப்பி வைக்க வேண்டும்.
மாணவரின் முழுப் பெயர், மாணவரின் வயது, கல்வி கற்கும் பாடசாலை அல்லது பல்கலைக் கழகம், தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம், தொடர்பு கொள்ள வேண்டிய மின்னஞ்சல் விலாசம்:-
(பெற்றோர் அல்லது பாதுகாவலர் விபரங்களும் இணைக்கப்படலாம்)

7. விபரங்கள் எமக்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் பெப்ரவரி 12, 2021 வெள்ளிக்கிழமையாகும். அந்த திகதிக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

8. பரிசு பெறும் மாணவர்களுக்கு பணத்தொகையும் சான்றிதழ்களும் நேரிலோ, தபால் மூலமாகவோ அல்லது வங்கி கணக்கு ஊடாகவோ அனுப்பி வைக்கப்படும்.

## பரிசுகள்

| 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு | ஐந்து ஆறுதல் பரிசுகள் |
|---|---|---|---|
| 300 கனடிய டொலர்கள் | 200 கனடிய டொலர்கள் | 100 கனடிய டொலர்கள் | 50 கனடிய டொலர்கள் |

### ZOOM பெப்ரவரி 27, 2021 சனிக்கிழமை

கனடா/அமெரிக்கா - காலை 9:00 | இலங்கை/இந்தியா - இரவு 7:30
ஐரோப்பா - மாலை 3:00 | அவுஸ்ரேலியா - அதிகாலை 1:00
**Meeting ID: 812 3636 6126 | Passcode: 962261**

### ZOOM பெப்ரவரி 28, 2021 ஞாயிற்றுக்கிழமை

கனடா/அமெரிக்கா - காலை 9:00 | இலங்கை/இந்தியா - இரவு 7:30
ஐரோப்பா - மாலை 3:00 | அவுஸ்ரேலியா - அதிகாலை 1:00
**Meeting ID: 827 6566 9766 | Passcode: 892482**

### நடுவர்கள்:

பேராசிரியர் சங்கர நாராயணன் (தமிழ்நாடு) | வழக்கறிஞர் தி. இராமகிருஷ்ணன் (தமிழ்நாடு)
கலாநிதி நல்லையா குமரகுருபரன் (இலங்கை) | திரு. ஆர். சர்வேஸ்வரா (இலங்கை)
திரு. குயின்ரஸ் துரைசிங்கம் (கனடா) | திரு. நிமால் விநாயகமூர்த்தி (கனடா)
திரு. வீணைமைந்தன் சண்முகராஜா (மொன்றியல் - கனடா)

சமர்ப்பிக்க வேண்டிய இறுதி திகதி :
பெப்ரவரி 12, 2021
E-mail: uthayannews@yahoo.com
WhatsApp : +1 416 732 1608
+1 416 587 0552

Our Media Partners
Anaidai Express HD
102.7 east FM தமிழ்
உலகத்தமிழர்
ஈழநாடு
ஈழமுரசு
yugam radio
MONதமிழ்
Roobam FM Toronto Digital Radio
Easy 24 News
weet TV

SANTHA
FULL SERVICE FACILITIES OF GENERAL CONTRACTORS
Santha Electrical, Plumbing and drainage service Residential Commercial and industrial All Repairs & Renovations
Santha Plumbing and drainage service
Tel : 416 200 5470
info@santha.ca
www.santha.ca
Santha Panchalingam

CAMSONICS SECURITY SYSTEMS INC
WE ONLY DO PROFESSIONAL INSTALLATIONS AND CONCEAL WIRES IN THE ATTIC OR BEHIND THE WALLS
FULL HD
PROTECT YOUR HOME AND BUSINESS ANY TIME ANY WHERE IN THE WORLD
Rajeev Sebarasha : 647.302.5748

FRUITS HABY
5925 Victoria Ave, Montreal, QC H3W 2R9

HOMELIFE TODAY REALTY LTD., BROKERAGE
VALLIKKANNAN MARUTHAPPAN
Direct: 416-880-6051 Bus: 416-298-3200
www.mvkhome.ca

வீடு விற்க! வாங்க
Award winning Agents will give you Professional, Reliable and Friendly Services.
We can arrange Mortgage, Second Mortgage and Refinance.
ROYALAN
" Our clients are our value"
Ragu Thillainathan 416-629-5800
Kailain Thillainathan 647-668-8276
kailain.thillai@gmail.com
homesbyraghu@gmail.com


FACEDRIVE FOODS
டொரன்ரொவில் தற்போது உணவுப்பொருட்கள் விநியோகத்திற்கான Food Delivery App பயன்பாட்டில் உள்ளது
FACEDRIVE FOODS
Local
Eco-Friendly
Affordable
நீங்கள் டொரன்ரொவில் ஒரு உணவகத்தையோ அன்றி பலசரக்கு கடையையோ நடத்துகின்றீர்களா?
தற்போது எம்மோடு இணைந்துள்ள சுமார் 300 உணவகங்களோடு நீங்களும் ஒருவராக இணைந்து எமது வாடிக்கையாளர்களான 250000 இற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களை எமது Food Delivery App ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.
Sign Up Today
இப்போதே எங்களோடு பதிவு செய்து மகிழ்வடையுங்கள்:
*குறைந்த கட்டணத்தில் விநியோகக் கட்டணங்கள்
*இலவசமாக உபகரணமும் பிறிண்டரும் கிடைக்கும்
*இலவசமான சந்தைப்படுத்தும் சேவைகள்
உங்களிடம் கேள்விகள் இருக்கின்றனவா?
அழையுங்கள்: 647 760 9272
Download on the App Store
Available on the Google Play


FACEDRIVE FOODS
டொரன்ரொவில் தற்போது உணவுப்பொருட்கள் விநியோகத்திற்கான Food Delivery App பயன்பாட்டில் உள்ளது
உங்களுக்கு மேலதிகமான வருமானம் தேவைப்படுகின்றதா?
ஒரு நாளைக்கு*
$200
சம்பாதிக்கலாம்
Become a driver
எமக்கு டெலிவரி சாரதிகள் தேவைப்படுகின்றார்கள்
உங்களிடம் கேள்விகள் இருக்கின்றனவா?
அழையுங்கள்: 647 760 9272
Download on the App Store
Available on the Google Play


Dream Design Build
Paramount Custom Homes Ltd.
REGISTERED BUILDER
TARION
TARION WARRANTY CORPORATION
416-268-5296
www.paramountcustomhomesltd.net
Incredible Quality
Quick Turnaround
Competitive Prices
140-100 Cowdray Court, Scarborough, ON M1S 5C8
Paramountcustomhomesltd@gmail.com

# MONEY PROBLEMS?™

ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்

## உங்களைக் கேளுங்கள்?



- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta™ credit

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்



**Scarborough / Downtown Toronto: 416-489-2000**

**Mississauga / Brampton: 416-650-5400**



| Scarborough | Toronto/Downtown | North York | Mississauga | Brampton |
|---|---|---|---|---|
| 201-4433 Sheppard Ave. E Scarborough, ON, M1S 1V3 | 800-120 Eglinton Ave. E Toronto, ON, M4P 1E2 | 306-1280 Finch Ave. W North York, ON, M3J 3K6 | 110-93 Dundas Street E. Mississauga, ON, L5A 1W7 | 201-7990 Kennedy Rd. South, Brampton, Ontario, L6W 0B3 |

**Mark Shamly**
*Tamil Consultant*

***Proudly Served over 15,000 clients since 2004***

**Visit : GtaCredit.Com**

**Ajay Oberoi**
*Experienced Credit Counsellor*



# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

**ENGLISH & TAMIL – SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**






உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

# பரவுவதைத் தடுக்கவும்.

## கோவிட்-19 மிகவும் ஆபத்தானது.

## வீட்டிலேயே இருக்கவும்.

## உயிர்களைக் காப்பாற்றுங்கள்.



**ontario.ca/coronavirus**
இணையத்துக்கு வருகை தாருங்கள்
ஒன்ராறியோ அரசுக்காக ஒன்ராறியோ அரசினால் வழங்கப்பட்டது.

**Ontario**



# விண்ணோர்கள் வரவேற்கும் வண்ணை தெய்வம்

**- கனடா-மொன்றியால் மாநகரிலிருந்து வீணை மைந்தன் எழுதுகிறார்**

"**கா**லங்கள் வாழ்த்தும் 300 ஈழத்துக் கலைஞர்கள்" எனும் ஒரு ஆவணத் தொகுப்பு நூலை வெளியிட்ட பெருமைக்குரிய கவிஞன், கலைஞன், எழுத்தாளன், பத்திரிகையாளன், விமர்சகன், வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் பேச்சாளன் எனப் பன்முகங்களைக் கொண்டிருந்த அன்பர் "வண்ணை தெய்வம்" அவர்கள் மறைந்தார் என்ற செய்தியை எனக்கு எடுத்து வந்த கனடா உதயன் ஆசிரியர் லோகேந்திரலிங்கம், "அவரைப் பற்றி நாம் ஏதாவது எழுத வேண்டும்" என்றார். அவர் என்னை நினைத்துத் தான் அவ்வாறு குறிப்பிட்டாரோ எனக்குத் தெரியாது, ஆனால் எனது மனதில் வண்ணை தெய்வம் தொடர்பான பல நினைவுப் பதிவுகள் வெளியே காட்சிகளாக தோன்றிய வண்ணம் இருந்தன.

நீண்ட காலமாக கலை இலக்கியப் பணியாற்றிக் கொண்டிருந்த வண்ணை தெய்வம் அவர்களை நான் 2019 வரை நேரில் காணும் சந்தர்ப்பம் கிட்டவில்லை. அருமை நண்பர் ரவி தமிழ்வாணனின் மணிமேகலைப் பிரசுரம் வெளியீடாக வந்த "காலங்கள் வாழ்த்தும் 300 ஈழத்துக் கலைஞர்கள்" எனும் அழகிய ஒரு ஆவணத் தொகுப்பு வெளியீட்டு விழா பாரிஸ் மாநகரில் இடம்பெற்றது தொடர்பான செய்தியை ஒரு வாரப் பத்திரிகையில் பார்த்தேன்.

அந்த சமயத்தில் தான் மொன்றியால் வாழ் நண்பர், ஆசிரியர் திரு சிவானந்தம், தான் பாரிஸ் நகருக்கு பயணமாவதாகச் சொன்னார். அச்சமயம், நான் பாரிஸ் நகரில் உங்களுக்கு அறிமுகமான இலக்கிய நண்பர்கள் இருந்தால், அவர்கள் மூலம் எழுத்தாளர் வண்ணை தெய்வம் அவர்களைத் தொடர்புகொண்டு, அவர் வெளியிட்ட அந்த நூலை வாங்கிக் கொண்டு வரும்படி கேட்டுக்கொண்டேன். எனது வேண்டுகோளை ஏற்று ஆசிரியர் சிவானந்தம் அவர்களும், மறந்து விடாமல், அந்த நூலை வாங்கிக் கொண்டு வந்ததுமல்லாது, நூலின் முன்பக்கத்தில் "என்றும் நல்வாழ்த்துக்கள்" -மு. சிவானந்தம்" என்ற வாழ்த்தும் வாசகங்களோடு என்னிடம் கையளித்தார். இந்த நேரத்தில் அவருக்கு எனது நன்றியை மீண்டும் பகிர்ந்து கொண்டு, இனி எழுத வந்த விடயத்திற்கு வருகின்றேன்.

வண்ணை தெய்வம் என்ற அற்புதமான மனிதரை நான் சந்திக்காது விட்டாலும், அந்த நூலைப் பார்த்ததுமே அவரது பெரிய மனதைப் பற்றிய அறிந்து கொண்டேன். தனது சொந்தச் செலவில் மற்றவர்களைப் புகழ்ந்துரைக்கும் புத்தகத்தை வெளியிட்ட அவரை மனதில் வாழ்த்திக் கொண்டு அந்த "காலங்கள் வாழ்த்தும் 300 ஈழத்து கலைஞர்கள் யார் யாரென அறியும் ஆவலுடன் நூலின் பக்கங்களைப் புரட்டத் தொடங்கினேன்.

ஈழத்தின் தவப் புதல்வர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், மற்றும் பன்முக ஆற்றல் படைத்த படைப்பாளிகள் என அந்த நூலை அலங்கரித்தவர்களில் பலர் எனக்கு அறிமுகமானவர்களாகவும், அறிமுகமில்லாதவர்களாகவும் இருந்தார்கள். அனைவருக்காகவும் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்த நிலையில், அங்கு சேர்க்கப்பட்டவர்களில் பல கனடிய படைப்பாளிகள் மற்றும் பத்திரிகையாளர்கள் பலரையும் பற்றிய குறிப்புக்களோடு அந்த நூலை வெளியிட்டிருந்தார் வண்ணை தெய்வம் என்பதை பரிந்து கொண்டு மேலும் பூரிப்படைந்தேன். அவர்களுள், அமரர் சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரன், ஈழத்துச் சிவானந்தன், எங்கள் ஊர், தமிழ் மகள், குறமகள் எழுத்தாளர் வள்ளிநாயகி, ஆசிரியப் பெருந்தகை அலெக்ஸாண்டர், நிலா குகதாசன், சேரன் உருத்திமூர்த்தி, திருமதி அவ்வை, மற்றும் எஸ். திருச்செல்வம், உதயன் ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம், சிந்தனைபூக்கள் எஸ். பத்மநாதன், அ.முத்துலிங்கம், கவிஞர் அனலை ஆறு ராஜேந்திரம், குரு அரவிந்தன், ஆகியோர் உட்பட பலரையும், இலக்கியக் குறிப்புக்களுடன், வீணைமைந்தன்-கே.ரி. சண்முகராஜா என எனக்கும் ஒரு பக்கத்தை ஒதுக்கியிருந்தார். அதில் என்னைப் பற்றி தான் அறிந்த செய்திகளையும் அன்பர் வண்ணை தெய்வம் பதிவு செய்திருந்ததை கண்டு மிகவும் ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தேன். அவரது பெருந்தன்மையை மனதிற்குள் பாராட்டிக் கொண்டேன்.

என்னைப் பற்றிய தகவல்கள் மற்றும் புகைப்படம் ஆகியவற்றை யாரிடமிருந்து அவர் பெற்றார் என்பது எனக்குத தெரியாவிட்டாலும், அவர் வாழ்த்திய கலைஞர்களில் நானும் ஒருவனாக இருந்தேன் என்றாலும் நான் என்ன சாதித்தேன் என்று எண்ணி என் நெஞ்சு குறு குறுத்தது.

இதைப்பற்றி ஒரு நாள் அவரிடமே கேட்டுத் தெரிந்து கொள்வோம் என்று நினைத்துக்கொண்டு அந்த நாளிற்காக காத்திருந்தேன்.

இவ்வாறான நிலையில் 2019ம் ஆண்டு முதன் முதலாக நான் பாரிஸ் நகருக்கு பயணம் செல்லும் வாய்ப்புக் கிட்டியது. "பாரிசுக்குப் போ" என்று எழுத்தாளர் ஜெயகாந்தன் எழுதியது போன்று எனது பயணம் அமைந்தது. பயனுள்ளதாக இருந்தது.

பாரிஸ் சென்றடைந்ததும், அடுத்த நாளே வண்ணை தெய்வம் அவர்களை தொலைபேசியில் அழைத்து, என்னை அறிமுகம் செய்து கொண்டு சந்திக்க வேண்டும் என்ற எனது விருப்பத்தைத தெரிவித்தேன். அப்போது அவர் தான் பாரிஸ் நகருக்கு வெளியே தொலைவில் வாழ்ந்து வருவதால், என்னை பாரிஸ் நகரின் மத்தியில் புகழ்பெற்ற தமிழர் பகுதியான "லாசப்பல்" கடைத் தெருவிற்கு வரும்படியும் அங்கு ஒரு குறிப்பிட்ட தமிழர் உணவகத்தில் சந்தித்து உரையாடுவோம் என்று ஆர்வத்துடன் குறிப்பிட்டார். எங்கள் சந்திப்புக்கு நேரம் குறிக்கப்பட்டது.

குறிப்பிட்ட ஒரு காலைப் பொழுதில் என்னுடைய மைத்துனர் என்னை அந்த கடைவீதிக்கு அழைத்துச் சென்றார். சந்திப்பின்போது எனது மைத்துனரும் வண்ணை தெய்வம் அவர்களும் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர்கள் என்றபடியால் அவர்கள் நெருக்கமாக உரையாடினார்கள். எனக்கும் மகிழ்ச்சியாகவிருந்தது அவர்களின் நெருக்கம். லௌகீக குடும்ப விடயங்களும் தாயகம் பற்றிய தகவல்கள் நிகழ்வுகள் ஆகியனவும் புலம் பெயர் தேசங்களில் இடம் பெறும் இலக்கிய முயற்சிகள் ஆகியவை தொடர்பாகவும், எமது உரையாடல் சுவாரஸ்யமாக தொடர்ந்தது. "உங்களைப் பற்றி ஒரு அன்பர் ரொரன்ரோவிலிருந்து எனக்கு தகவல் அனுப்பியிருந்தார். அதை வைத்தே நான் உங்களைப் பற்றிய அந்த குறிப்புக்களை எனது நூலில் பிரசுரம் செய்தேன்" என்றார். அதற்கு நான் "என்னைப் பற்றி நீங்கள் குறிப்பிட்ட அளவிற்கு நான் வளரவுமில்லை. பங்காற்றவுமில்லை" என்று அடக்கமாகச் சொன்னேன்.

"காலம் உங்களைப் பதிவு செய்வதை யாரும் தடுக்கவே முடியாது" என்று சட்டென்று பதில் சொன்னார் வண்ணையார். நான் மனம் குளிர்ந்து போனேன். உணவகத்தில் அவர் ஆடர் செய்த தேங்காய் சொட்டுக்கள் கலந்த சுண்டலுடன் சூடான நேநீரையும் சுவைத்து மகிழ்ந்து உரையாடலையும் இனிப்போடு நிறைவு செய்து கைகளைக் குலுக்கிக் கொண்டு விடைபெற்றோம்.

"கலைமாமணி" முகத்தார் எஸ் யேசுரட்ணம் எழுதியது போன்று, "களங்கமில்லாத உள்ளம், குழந்தைகள் போன்று பழகும் மேன்மை, பெரியவர்கள் இடத்தில் காட்டும் பாசமும் பணிவும் அன்பும் பண்பும், வேறென்ன வேண்டும் தமிழ் பேசும் படைப்பாளிகளுக்கு. அவை வண்ணையாரிடம் குவிந்து கிடந்தன.

எமது சுந்தரத் தமிழ் திரைகடல் தாண்டி எங்கெங்கோ சென்ற போதிலும் அமிழ்தெனும் தமிழை அழைத்தேகும் வண்ணை தெய்வம் அவர்களின் பண்பும் காலங்கள் வாழ்த்தி நிற்கும்.

ஆயிரத்தில் ஒருவர்தான் வண்ணை தெய்வம்.

அன்னார் வடித்த அந்த நூல் எம் கரங்கள் சேர்த்தெடுத்து பொன்னான மாலையென சூட்டிக் கொள்வோம் எமது ஈழத்தாய்க்கு!



# தமிழ்க் கட்சிகள் ஐநாவுக்கு அனுப்பிய பொது ஆவணமும், அதன் பின்னரும்

-

**யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



ஐநா மனித உரிமைகள் ஆணையாளருடைய அறிக்கை உத்தியோகப்பற்றற்ற விதத்தில் வெளிவந்திருக்கிறது. இந்த அறிக்கையின்படி கடந்த கிழமை மூன்று தமிழ் தேசிய கட்சிகள் கூட்டாக முன்வைத்த கோரிக்கைகளில் முக்கியமான சிலவற்றை மனித உரிமைகள் ஆணையர் சுட்டிக்காட்டியிருக்கிறார். இந்த அறிக்கையானது இதற்குமுன் வெளிவந்த மனித உரிமை ஆணையர்களின் அறிக்கைகளோடு ஒப்பிடுகையில் முன்னேறியிருக்கிறது. தவிர இலங்கை அரசாங்கத்துக்கு அச்சுறுத்தலான அம்சங்கள் சிலவற்றை கொண்டிருக்கிறது. முக்கியமாக பரிகார நீதியை தேடும் தமிழ் மக்களுக்கு உற்சாகமூட்டுவதாகக் காணப்படுகிறது. ஆனால் இந்த அறிக்கையின் தொடர்ச்சியாகவே மனித உரிமைகள் பேரவையின் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளும் அமையுமா என்பதே இங்குள்ள முக்கிய கேள்வியாகும். ஏனெனில் இதற்கு முன்னரும் ஐநா மனித உரிமை ஆணையர்களின் அறிக்கைகள் காட்டமானவைகளாக இருந்திருக்கின்றன. ஆனால் அந்த அறிக்கைகளின் பின் நிறைவேற்றப்பட்ட ஐநா தீர்மானங்கள் மென்மையானவைகளாகவும் அரசுக்கும் அரசுக்கும் இடையிலான கட்டமைப்பு சார் உறவுகளை காப்பாற்றும் நோக்கிலானவைகளாகவுமே அமைந்திருந்தன. இம்முறையும் ஐநா.மனித உரிமைகள் பேரவையின் நடவடிக்கைகள் அவ்வாறுதான் அமையுமா? பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

இந்த அறிக்கையை முன்வைத்து இலங்கை அரசாங்கம் தற்காப்பு நடவடிக்கைகளில் ஏற்கனவே இறங்கிவிட்டது.கடந்த வாரம் இலங்கை ஜனாதிபதி ஓர் ஆணைக்குழுவை நியமித்திருக்கிறார். ஏற்கனவே உருவாக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் நடவடிக்கைகளை விசாரிப்பதற்கான ஆணைக்குழு அது. இலங்கைத்தீவின் நவீன அரசியலில் ஆணைக்குழுக்கள் எனப்படுபவை அபகீர்த்தி மிக்க ஒரு பாரம்பரியத்துக்குரியவை. அது ஒரு கண்துடைப்புப் பாரம்பரியம். பாதிக்கப்பட்ட மக்களை பேய் காட்டும் ஒரு பாரம்பரியம். இம்முறை அதன் அடுத்தகட்ட வளர்ச்சியாக ஆணைக்குழுக்களை விசாரிப்பதற்கு ஒரு ஆணைக்குழுவை ஜனாதிபதி நியமித்திருக்கிறார். இதன்மூலம் அவர் ஐநாவை எதிர்கொள்ளத் தயாராகி வருகிறாரா?

இந்த ஆணைக்குழுவின்மூலம் மட்டும் அல்ல அவர் பதவியேற்றதிலிருந்து கடந்த ஆண்டு முழுவதும் அவர் நிலைமாறுகால நீதி தொடர்பில் எவ்வாறான அணுகுமுறைகளைக் கொண்டிருந்தார் என்பதனை தொகுத்துப் பார்த்தால் அவர் கடந்த ஆண்டு முழுவதும் ஐநாவை எதிர்கொள்ளத் தயாராகி வருவதை காணமுடியும்.அவர் உத்தியோகபூர்வமாக ஐநாவின் 30/1 தீர்மானத்திலிருந்து விலகப்போவதாக அறிவித்திருக்கலாம். ஆனால் நடைமுறையில் அந்த தீர்மானத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட கட்டமைப்புகளை அப்படியே தொடர்ந்தும் அவற்றின் நலிவுற்ற நிலையிலும் பேணிவருகிறார்.எனவே இதன்மூலம் தான் நிலைமாறுகால நீதி தொடர்பில் ஒரு உள்நாட்டு பொறிமுறைக்கு தயார் என்ற செய்தியை அவர் கடந்த ஆண்டு முழுவதும் ஐநாவுக்கு வழங்கி வந்திருக்கிறார். எனவே கடந்த ஓராண்டு கால ஆட்சியைத் தொகுத்துப் பார்த்தால் அரசாங்கம் ஐநாவை சுதாரிக்க தயாராக இருப்பதாகவே தோன்றுகிறது. ஆணைக்குழுக்களை விசாரிக்கும் ஆணைக்குழு இதில் ஆகப் பிந்திய ஒரு சுதாகரிப்பு நடவடிக்கை ஆகும்.

இவ்வாறு அரசாங்கம் ஐநாவோடு எந்த அளவுக்கு சுதாரிக்க போகிறது என்பதில்தான் வரும் மார்ச் மாதம் ஐநா மனித உரிமைகள் பேரவையில் எடுக்கப்படும் முடிவு தங்கியிருக்கிறது. கடந்த வாரம் கசியவிடப்பட்ட மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கையின்படி ஐநா இலங்கை அரசாங்கத்தின் மீது இறுக்கமான நடவடிக்கைகளை எடுக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பு அதிகம். உண்டு. ஆனால் தமிழ்மக்கள் இதுவிடயத்தில் கற்பனையில் மூழ்கியிருக்க முடியாது. ஏனெனில் இதற்கு முன்னரும் ஐநா மனித உரிமைகள் ஆணையர்களின் அறிக்கைகள் ஒப்பீட்டளவில் காட்டமாகத்தான் இருந்தன. ஆனால் ஐநா தீர்மானங்கள் மென்மையானவைகளாகத்தான் இருந்தன.

இப்படித்தான் ஐநாவின் சிறப்புத்தூதுவர்களின் அறிக்கைகளும் கடுமையானவைகளாக அமைவதுண்டு. ஏனெனில் சிறப்புத்தூதுவர்கள் துறைசார் நிபுணத்துவம் மிக்கவர்கள். அவர்கள் தமது துறைசார் ஒழுக்கத்துக்கூடாக சேகரித்து பகுப்பாய்வு செய்யப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அறிக்கைகளை வெளியிடுகிறார்கள். ஆனால் தீர்மானங்கள் அவ்வாறானவை அல்ல. அவை அரசுகளின் தீர்மானங்கள். அரசுகள் எப்பொழுதும் அரசுக்கும் அரசுக்கும் இடையிலான ராணுவ்பொருளாதார நலன்களின் அடிப்படையில்தான் முடிவுகளை எடுக்கின்றன. எனவே ஐநா தீர்மானங்கள் எனப்படுகிறவை அரசுகளின் தீர்மானங்களை. ஆனால் ஐநா மனித உரிமைகள் ஆணையம் உட்பட சிறப்புத்தூதுவர்களின் அறிக்கைகள் நிபுணத்துவ ஒழுக்கத்துக்கூடாக சேகரிக்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

இந்த இடைவெளியை தமிழ் மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த இடைவெளிதான் தமிழ் மக்கள் அதிகம் வேலை செய்ய வேண்டிய இடம். உலக சமூகம் தமிழ் மக்களுக்கு வழங்கக்கூடிய நீதியின் வரையறைகளை அது உணர்த்துகிறது. எனவே ஐநா மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கையின் தொடர்ச்சியாக மார்ச் மாதம் ஐநா மனித உரிமைகள் பேரவையின் நடவடிக்கைகள் அமையுமா என்பது சந்தேகமே.மாறாக இப்படிப்பட்ட அறிக்கைகள் அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க உதவும். அரசாங்கம் இந்த அறிக்கைகளின் கடுமையை உணர்ந்து தன்னை சுதாகரித்துக் கொள்ள முடியும்.அவ்வாறு சுதாகரித்துக் கொள்ளும் பட்சத்தில் ஐநா தீர்மானங்கள் அரசாங்கத்தோடு எப்படியெல்லாம் என்கேஜ் பண்ணலாம் என்று சிந்திப்பவைகளாகவே அமையும். அல்லது அரசாங்கம் இந்த அறிக்கைகளுக்கு கோபமான எதிர்வினைகளை காட்டினால் அதற்காகவும் ஐநா மனித உரிமைகள் பேரவை அரசாங்கத்தை தண்டிக்கும் என்று சொல்ல முடியாது.

முதலாவதாக அரசாங்கத்தைத் தண்டிக்கும் சக்தி மனித உரிமைகள் பேரவைக்கு இல்லை. இரண்டாவதாக அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் ஆணையும் மனித உரிமைகள் பேரவைக்கு இல்லை. மனித உரிமைகள் பேரவை எனப்படுவது ஓர் அரசாங்கம் இணங்கினால் மட்டுமே அந்த நாட்டுக்குள் இறங்கி வேலை செய்யலாம். குறிப்பிட்ட அரசாங்கத்தின் ஒப்புதலோடுதான் மனித உரிமைகள் பேரவை அந்த நாட்டுக்குள் செயற்படும்.எனவே அரசாங்கத்துக்கு எதிராக எதையும் செய்யக் கூடிய ஒரு ஆணை அந்த அவைக்குக் கிடையாது.

இது காரணமாகத்தான் மூன்று தமிழ் தேசியக் கட்சிகளும் பொறுப்புக்கூறலை ஐநா மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டு போக வேண்டும் என்று கேட்டன. நிலைமாறுகால நீதிப் பயில்வின் தோல்விகள் காரணமாகவும் கடந்த 10ஆண்டுகளுக்கு மேலான மனித உரிமைகள் பேரவையின் செயற்பாடு எதிர்பார்த்த வெற்றியைப் பெறாத ஒரு பின்னணியிலும் பொறுப்புக்கூறலை மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டு போக வேண்டும் என்று மேற்படி மூன்று கட்சிகளும் கோரிக்கை விடுத்துள்ளன அக்கோரிக்கையின் சாராம்சம் வருமாறு.....

முதலாவதாக இலங்கையை இனப்படுகொலை, மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள், யுத்த குற்றங்கள் உள்ளிட்ட குற்றங்களை விசாரிப்பதற்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கும் வேறு பொருத்தமானதும் செயற்படுத்தக்கூடியதுமான சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறைகளுக்கும் பாரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஐ. நா. பொதுச்சபை, ஐ. நா. பாதுகாப்புச்சபை போன்றவை எடுக்க வேண்டுமென்று புதிய தீர்மானத்தில் உறுப்பு நாடுகள் வலியுறுத்த வேண்டும்.

இரண்டாவதாக, ஐ. நா. மனித உரிமைப் பேரவையின் தலைவர் இவ்விடயத்தை மேற்கூறப்பட்ட நடவடிக்கைக்காக மீளவும் ஐநா. செயலாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மூன்றாவதாக, ஐ. நா. மனித உரிமை உயர்ஸ்தானிகரின் அலுவலகம் இலங்கையில் தொடர்ந்து நடைபெறுகின்ற மீறுதல்களை கண்காணிக்க இலங்கையில் அதன் அலுவலகமொன்றை ஸ்தாபித்தல் வேண்டும்.

நாலாவதாக, மேலே முதலாவதாக கூறப்பட்டதிற்கு பங்கமில்லாமல் ஐ. நா. பொதுச் சபையின் உபபிரிவாக, சீரியா சம்பந்தமாக உருவாக்கப்பட்ட சாட்சிகளை சேகரிக்கிற பொறிமுறை போன்றதொன்றை (IIIM) கடுமையான 12 மாத அவகாச நிபந்தனையோடு ஏற்படுத்துதல்.இதுதான் அக்கூட்டுக் கோரிக்கையின் சாராம்சம்.

அதேசமயம் அந்தக் கோரிக்கைகளில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் விமர்சனங்கள் எழுகின்றன. ஆனால் அந்த ஆவணம் இந்த அடிப்படையில் தயாரிக்கப்பட்டது என்பதை குறித்து ஆழமாக விளங்கிக் கொள்ளும் பொழுது அதன் மீது நிகழும் பெரும்பாலான விமர்சனங்களுக்கு இடமிருக்காது. ஐநாவுக்கு ஒரு பொதுக் கோரிக்கையை முன்வைப்பது என்று முடிவெடுத்தபோது மூன்று கட்சிகளும் முதலில் இணங்கிக் கொண்ட விடயம் பொறுப்புக்கூறலை ஐநா மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டு போக வேண்டும் என்பதுதான். அந்த அடிப்படையில்தான் அப்பொது ஆவணம் தயாரிக்கப்பட்டது. எனவே மனித உரிமைகள் பேரவைக்கு எழுதப்படும் கடிதத்தில் அதை அழுத்திக் கூறுவது என்று முடிவெடுக்கப்பட்டது. இவ்வாறு மனித உரிமைகள் பேரவைக்கு ஒரு கூட்டுக் கோரிக்கையை முன்வைத்தபின் அதையடுத்து மேலும் இரண்டு அல்லது மூன்று கடிதங்களை ஐநா பொதுச் சபைக்கும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கும் எழுதுவது என்றும் அப்போது தீர்மானிக்கப்பட்டது. பொதுச் சபைக்கு எழுதப்படும் கடிதத்தில் இணைக்கப்படும் விடயங்களை மனித உரிமைகள் பேரவைக்கு எழுதும் கடிதத்தில் தவிர்க்கலாம் என்றும் யோசிக்கப்பட்டது.

அதே சமயம், ஒரு உலகப் பொது மன்றத்தில் அதாவது தமிழ் மக்களின் விடயம் விவாதிக்கப்படும் ஒரு உலகப் பொது மன்றத்தில் தமிழ் மக்கள் தமது எல்லா கோரிக்கைகளையும் முன் வைப்பது நல்லது என்று ஒரு கருத்தும் கூறப்பட்டது. எனினும் மனித உரிமைகள் பேரவையோடு சம்பந்தப்பட்ட விடயங்களை முதலாவது கடிதத்தில் கேட்டுக் கொள்வது என்றும் ஏனைய விடயங்களை அடுத்தடுத்த கடிதங்களில் குறிப்பிடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி மேலும் சில கடிதங்களை இம்மூன்று கட்சிகளும் கூட்டாக எழுத வேண்டியிருக்கும். ஆனால் முதலாவது கடிதத்தின்பின் நிகழும் வாதப்பிரதிவாதங்களை வைத்துப்பார்த்தால் அவ்வாறு அடுத்தடுத்த கட்ட ஐக்கியப்பட்ட முயற்சிகளுக்குப் போகும் தகுதி தமிழ் கட்சிகளிடம் உண்டா என்ற கேள்வி எழுகிறது.

அவ்வாறு தமிழ் தரப்பு ஒருமித்த தரப்பாக கோரிக்கைகளை முன்வைத்து ஒருமித்த தரப்பாக விவகாரங்களை கையாளுமாக இருந்தால் அரசுகளை நோக்கி வெற்றிகரமாக லொபி செய்ய முடியும்.அது மட்டுமல்ல அண்மைக்காலங்களில் அதிகரித்துவரும் நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் உட்பட காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதிஅரசியல் கைதிகளுக்கான நீதி போன்ற விடயங்களிலும் ஒருமித்துச செயற்பட முடியும்.கடந்த ஞாயிற்றுக்கிழமை காணிப் பிரச்சினைகளுக்காக ஒன்றாகத் திரண்டு போராடும் நோக்கத்தோடு தமிழ் கட்சிகளில் ஒரு பகுதியினர் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் கூடினார்கள்.அதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பங்குபற்றவில்லை.எனினும் எதிர்காலத்தில் அக்கட்சியையும் இணைத்துக் கொள்வது என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட மூன்று கட்சிகள் அரங்கில் உள்ளன என்றால் அதன் பொருள் மூன்று விதமான வேறுபட்ட நோக்கு நிலைகளை அவை பிரதிபலிக்கின்றன என்பதுதான். எனவே மூன்று பேரும் ஒன்றாக ஒரே கட்சியாக நிற்க முடியாத ஓர் அரசியல் சூழல் உள்ளது என்பதை முதலில் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த வேற்றுமைகளில்தான் ஒரு இணக்கப்பாட்டை காண வேண்டியிருக்கிறது.

ஐநாவை எதிர்கொள்வதற்கு எப்படி மூன்று கட்சிகளையும் ஒரு பொது உடன்பாட்டுக்கு கொண்டுவர முடிந்ததோ அப்படியே இனிமேலும் அடிப்படையான முக்கிய விடயங்களில் கட்சிகளை ஒன்றிணைக்கலாம் என்ற நம்பிக்கை இப்போதும் உண்டு.

மலேசிய மடல்

# ஆண்டுக்கு ஒரேமுறை கிடைக்கும் வாய்ப்பும் பறிபோனது உறுமி மேளக் குழுவினர் சோக இசை உறுமிமேளக் கடை வைத்திருக்கும் ரகு விவசாய பண்ணையில் வேலை



நக்கீரன்

செமிஞ்சி, ஜன.27

**தை**ப் பூச விழாவை மட்டுமே நம்பி இருக்கும் உறுமி மேள இசைக் குழுவினர், இந்த ஆண்டு தைப்பூச விழா நடைபெறாததால் ஆயிரக் கணக்கான உறுமி மேள இசைக் கலைஞர்கள் பெரும் ஏமாற்றத்திற்கும் நட்டத்திற்கும் ஆளாகி உள்ளதாக மலேசிய உறுமி மேள இசை இயக்கத்தின் சிலாங்கூர் மாநிலத் தலைவர் சி.ஆர். ரகு ராமு தெரிவித்தார்.




உறுமி இசைமீது கொண்ட ஆர்வத்தால், ஆரம்பத்தில் பகுதி நேரமாக செயல்பட்டு வந்தேன். காலப் போக்கில், இதில் மிகுந்த ஆர்வமும் பற்றும் ஏற்பட்டதால் சின்னராசு உறுமி மேளக் குழு என்ற பெயரில் சொந்தக் குழுவை அமைத்ததுடன், உறுமி மேளத்தை செய்யவும் பழுதுபார்க்கவும் கூடிய கடை-யையும் செமிஞ்சியில் நிறுவினேன் என்று ரகு ராமு கூறினார்.

கடந்த 2020-ஆம் ஆண்டு தைப்பூசத்திருநாள் விழாவின்போது, பத்தமலையில் இரண்டு நாட்கள் தங்கி தொழில் செய்த வகையில், பன்னிரெண்டு பேர் கொண்ட எங்கள் குழுவிற்கு வெ.12,000 வருமானம் கிடைத்தது.

காவடி ஏந்திய பக்தர்களுக்கு இரவு பகலாக கண்விழித்து, பசியை மறந்து உறுமி மேளம் இசைத்ததால், செலவெல்லாம் போக ஆளுக்கு 800 வெள்ளி கிடைத்தது. இந்த வருமானம் வருடத்திற்கு ஒரேஒரு முறைதான் கிடைக்கும். இதைத் தவிர, மற்ற நிகழ்ச்சிகளில் வாசிக்க அழைப்பு கிடைத்தால் கலந்து கொள்வோம்.

பெரும்பாலும் வாரக் கடைசி, அல்லது பொது விடுமுறை நாள் என்றால்தான் ஏற்றுக் கொள்வோம். காரணம், இந்த இசைக் குழுவில் இடம்பெற்றுள்ளவர்கள் வேறுவேறு வேலை செய்வதால், வேலைக்கு பாதிப்பு இல்லாமல் இருக்க விடுமுறை நாளாக தேர்ந்தெடுத்துக் கொள்வோம்.

கடந்த 11 மாதங்களாக எந்த நிகழ்ச்சியும் எங்கும் நடைபெறாததால், எங்கள் இசைக் குழுவினரை ஒருவரும் நாடுவதில்லை. நாடு முழுவதும் 500-க்கும் மேற்பட்ட உறுமி மேள இசைக்குழுவினர் இருக்கின்றோம். அனைத்துக் குழுக்களுக்கும் தைப்பூச விழாக் காலத்தின்போது கண்டிப்பாக வாய்ப்பு கிடைக்கும்.


சில ஆண்டுகளில், தாக்குப் பிடிக்க முடியாத அளவுக்கு அதிக வாய்ப்பு கிடைக்கும். அந்த சமயத்தில் வெளி ஊர்களில் இருந்தெல்லாம் உறுமி மேள இசைக் குழுவினரை அழைப்போம். இந்த, 2021-ஆம் ஆண்டில் வெறுமைதான் மிஞ்சியது.




செமிஞ்சியில் வைத்திருக்கும் உறுமி மேளக் கடையில் மேளம் கட்டுதல், பழுது பார்த்தல் என வருடத்துக்கு 40, 50 ஆயிரம் வெள்ளிவரை சம்பாதிக்கும் நான், இப்பொழுது கடையை மூடிவிட்டு, வருமானத்திற்கு ஏதாவது செய்தாக வேண்டுமே என்ற எண்ணத்தில் மாற்று வேலை செய்து வருகி-றேன் என்று ரகு ராமு கூறுகிறார்.

உறுமி மேளத்தின்மீது கொண்ட ஆர்வத்தாலும் இசையின்பால் எழுந்த ஆர்வத்தாலும்தான் நாங்கள் இதில் இணைந்துள்ளோம். எங்கள் செமிஞ்சி சின்னராசு உறுமி மேள இசைக்குழுவில் இடம்பெற்றுள்ள 12 பேரில் எழுவருக்கு வங்கிப் பணி, அரசு வேலை போன்ற நிரந்தர வேலை இருக்கிறது. மற்றவர்கள் என்னைப் போல சிரமப்படுகின்றனர்.

ஒருவர் நண்டு, இறால் பிடித்து விற்கிறார். இன்னொருவர் உணவு விநியோகம் செய்கிறார். நான் ஒரு விவசாய - கால்நடைப் பண்ணையில் பணி புரிகிறேன். வாழ்க்கையில் புதிய பாடத்தைப் பயின்று வருவதாக செம-ினி சின்னராசு இசைக்குழுத் தலைவர் ரகு ராமு தெரிவிக்கிறார்.



இந்த கொரோனா கால பாதிப்பை எல்லோரும் பொறுமையுடன் எதிர்கொள்ளத்தான் வேண்டும். அதேவேளை, இந்த நிலை இத்தோடு அகலவேண்டும். நீடித்தால், உலகம் தாங்காது என்று ரகு ராமு மேலும் சொன்னார்.

ரகு ராமு தலைமையில் சிப்பாங் வட்டாரத்தில் செயல்படும் இன்னொரு உறுமி மேள இசைக்குழுவான "தில்லை ஜீவன் உறுமி மேள இசைக்குழு"வின் தலைவர் ஜீவன் செல்வன் என்னும் இளைஞர், தன்னுடைய குழுவைச் சேர்ந்த பெரும்பாலான இளைஞர்கள் வேலை இழந்து துன்பப்படுகின்றனர் என்றார்.

கடந்த ஆண்டு பத்துமலை தைப்பூச விழாவின்போது இரண்டு நாட்கள் முகாமிட்டிருந்தோம். கிடைத்த வருமானத்தில் சாப்பாடு, போக்குவரத்து செலவு போக மீதியை எங்கள் இசைக்குழுவின் வங்கிக் கணக்கில் வைத்திருந்தோம். உருமி மேளங்களை பழுது பார்த்து சீர் செய்தல் போன்ற நோக்கத்திற்காக எல்லா பணத்தையும் செலவு செய்துவிடாமல் எப்பொழுதும் சேமித்து வைப்போம்.

இந்த ஆண்டு ஒன்றுக்கும் வாய்ப்பில்லாமல் போய்விட்டது என்று சிறுரக லோரி ஓட்டுநரான ஜீவன் செல்வன் குறிப்பிட்டார்.

- **நக்கீரன்** (Nakkeeran)**: 013-244 36 24**



# இவ்வார ராசிபலன்

## 29-01-2021 வெள்ளி தொடக்கம் 04-02-2021 வியாழன் வரையும்




**மேஷம்:** உபயோகமும் உன்னதமும் நிறைந்த நல்ல வாரம். புது முயற்சிகள் பலன் அளிக்கும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பாலிய நண்பர் சந்திப்பு கிட்டும். பொருளாதாரம் மேம்படும். பேச்சில் கவனம் தேவை. கடன் பாக்கிகள் வசூலாகும். வாகன யோகமுண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகாரம் குவியும். சகோதர வழியில் கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: ஸ்ரீ ராஜவிநாயகர், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**ரிஷபம்:** ஆனந்தமும், ஆதாயமும் அமைதியும் மிகுதியாகக் கூடிய அற்புதமான வாரம். கடன் சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பணநடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். அணிமணிகள் சேரும். பெண்களுக்கு யோகம் கூடும். பணப்புழக்கம் சரளமாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: நந்தாதேவி, அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**மிதுனம்:** தேவைகள் பூர்த்தியாகி ஆசைகள் நிறைவேறும் அற்புத வாரம். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். தென்றல் வீசும். எதிர்ப்புகள் விலகும். நோய் அகலும். பெயர், புகழ், கௌரவம், செல்வாக்கு உயரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டமாகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும்.
வழிபடவேண்டிய தெய்வம்: புட்டுச் சொக்கநாதர், அதிர்ஷ்ட எண்: 5,1,5,0
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**கடகம்:** பழக்கமான நண்பர்களால் கலக்கமான சூழ்நிலைகள் விலகும் வாரம். பழைய பகை மாறும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பிள்ளைகளால் பெருமை கூடும். புது முயற்சிகள் தள்ளி வைக்கவும். தனவரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். உற்சாகம் அதிகரிக்கும். திடீர் செலவு ஏற்படும். மங்கல செய்தியால் மனம் மகிழும்.
வழிபடவேண்டிய தெய்வம்: வெக்காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,3,2,7
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,R




**சிம்மம்:** இல்வாழ்க்கை நல்வாழ்க்கையாய் அமையக் கூடிய நல்ல வாரம். ஆடம்பர செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். ஆனந்தம் குடிக்கொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பேச்சில் கனிவு தேவை. களவுப் போன பொருள் திரும்ப கிடைக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: திருமலைராயர், அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V




**கன்னி:** பணிவான பேச்சுக்களால் பணவரவை எடுத்துக் கொள்ளக்கூடிய வாரம். இடமாற்றம் நன்மைத் தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். உத்தியோக உயர்வு கிட்டும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உடன் பிறப்புகளால் உதவி கிட்டும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். மேன்மையான நாள். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஆதிவிநாயகர், அதிர்ஷ்ட எண்: 7,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,F




**துலாம்:** சொல்வாக்கு மூலமாகவே செல்வாக்கு உயரக்கூடிய வாரம். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் கலை கட்டும். உறவினர் வருகை உண்டு. ஆறுதலான சூழ்நிலை அமையும். பணியில் உயர்வு கிட்டும். கஷ்டகாலம் மறையும். பணிவும், துணிவும்கூடும். விவேகமான வாரம். வெளியூர் பயணம் வெற்றி தரும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஹரிஹராசுதன், அதிர்ஷ்ட எண்: 9,7,1,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**விருச்சிகம்:** உழைப்பால் மதிப்பும் உங்களால் சிறப்பும் சேரக்கூடிய பொறுப்பான வாரம். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். தொட்டது துலங்கும் நாள். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சக்திபாலகன், அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள், O,M




**தனுசு:** இதயத்தில் உற்சாகமும், இல்லத்தில் சந்தோஷமும் இனிமையாய் மலரக்கூடிய அற்புதமான வாரம். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவுப் போகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும்.புதிய வேலை வாய்ப்பு கிட்டும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சந்தான லட்சுமிகணபதி, அதிர்ஷ்ட எண்: 4,1,7,8
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மகரம்:** கைமேல் காசும், கௌரவ வாய்ப்பும் கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பெயர், புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். பொதுப் பணிகளில் ஆர்வம் ஏற்படும். திருமணத் தடைகள் நீங்கும். புதுத் தொழிலை துவங்கும் வாய்ப்பு உள்ளது. வெளியூர் பயணம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். எண்ணிய காரியம் கை கூடும். புண்ணியஸ்தலம் செல்வீர்கள்.
வழிபடவேண்டிய தெய்வம்: மணக்குழ பகவதி அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,4,0,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,R




**கும்பம்:** சந்தோஷமான நிகழ்வும் சாதகமான சூழ்நிலையும் கிடைக்ககூடிய வாரம். இனிப்பான செய்திகள் வரும். பழிச் சொல்லிலிருந்து விடுபடுவீர்கள். சொத்துப் பிரச்சனைகள் தீரும். பணியாட்களால் தொல்லை மாறும். கல்வியில் மந்த நிலை மாறும். ஜவுளித் தொழில் உயர்வு தரும். கலைத் தொழில் திருப்பம் வரும். அலுவலகங்களில் பாராட்டு குவியும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவரின் தொல்லைக் குறையும். பிரித்து குடும்பம் ஒன்று சேரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: தாய்முகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 1,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**மீனம்:** பூமியால் லாபமும் புத்திர யோகமும் கிடைக்கக்கூடிய வாரம். மனம் மகிழும் நாள். உழைப்பிற்கான பலனை பெறுவீர்கள். திறமைகள் அதிகமாகும். இன்னல்கள் அகலும். கடன் தீரும். ஆக்கம் அதிகரிக்கும். பழைய பாக்கி வசூலாகும். வியாபாரத்தில் கவனம் தேவை. தனவரவில் தடங்கல் உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். பழைய நட்பு பலன் தரும். உறவினரால் பாதகம் உண்டு. உடல் நலனில் அக்கறை தேவை. உலோகத் தொழில் உயர்வு தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சிங்கப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K


### வீணாவின் கவிக்கணை

பணம் பத்தும் செய்யலாம்
ஒருநாள் அதுவே
பத்தாமலும் போகலாம்,
ஒருவனை உயர்த்தவும்
தாழ்த்தவும் அதுவே
காரணமும் ஆகலாம்,
காரண காரியங்கள்
சிறப்பாக முடிந்தபின்னர்,
அரங்கேறிய நாடகங்களும்
கலைந்து முடிவுக்கு வரலாம்!

2021 UTHAYAN உதயன்
25 வது வெள்ளி விழா

# படைப்பிலக்கியப் போராளி 'மல்லிகை ஜீவா' மறைந்தார்

## (1927 ஆகஸ்ட் – 2021 ஜனவரி)



**(அமரத்துவம் அடைந்த அற்புதப் படைப்பாளி "ஜீவா" அவர்களின் மறைவினால் துயரில் ஆழ்ந்துள்ள அவரது குடும்பத்தினர், நண்பர்கள், மற்றும் உலகெங்கும் வாழும் படைப்பாளிகள், வாசகர்கள் ஆகியோரோடு நாமும் இணைந்து அவரை வழி அனுப்பி வைப்போமாக! -கனடா உதயன் ஆசிரிய பீடம்)**

"மல்லிகை" என்னும் ◌மாசிகையை 1966 ஆண்டு தொடக்கம் 2012 டிசம்பர் மாதம் வரை தொடர்ந்து 48 வருடங்கள் நடத்தி, 401 இலக்கியக் கனம் கொண்ட இதழ்களை பதிப்பித்த ஒரு உன்னத படைப்பாளி, எழுத்தாளர்களை வழி நடத்திச் சென்ற படைப்பிலக்கியப் போராளி எமது அன்பிற்குரிய டொமினிக் ஜீவா மறைந்தார் என்ற செய்தி உலகெங்கும் உள்ள எழுத்துலக நண்பர்களை உலுக்கிவிட்டது என்றே கூற வேண்டும்.

தான் ஒரு இலக்கியவாதியாக மட்டுமல்லாது, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் உன்னதமான ஒரு பங்காளியாகவும் செயற்பட்டு, அதன் மூலம் இலங்கையின் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முன்னோடியாகவும் திகழ்ந்வர் எங்கள் ஜீவா அவர்கள். இலங்கை சாகித்திய மண்டலத்தின் இலக்கியத்திற்கான விருதினை இவரது "தண்ணீரும் கண்ணீரும்" என்னும் சிறுகதைத் தொகுதி 1961 ல் பெற்றுக்கொண்ட பெருமைக்குரியவர். பின்னர் இரண்டாவது தடவையும் 1963ல் "பாதுகை" என்னும் சிறுகதைத் தொகுதிக்கான பரிசைப் பெற்றுக்கொண்டார்.

1927ம் ஆண்டு யூன் மாதம் 27ம் திகதி பிறந்த ஜீவா அவர்கள், தனது 93 வயதில் மரணத்தை தழுவியுள்ளார். தனது வாழ்நாள் முழுவதும் இலக்கியத்திற்காகவே அர்ப்பணித்த அவர் மண்ணையும் மனங்களையும் நேசித்த பெருமைக்குரியவர். உன்னதாமான சொற்பொழிவாளராகவும், அசுரத்தனமான உழைப்பாளியாகவும், திகழ்ந்து எழுத்தாளர் பரம்பரையின் பிதாமகராகவும் விளங்கினார். இவரது அபாரத் திறமையும், கூரிய பார்வையுமே அன்னாரை உன்னதமான படைப்பாளியாக வளர்த்தெடுத்தது என்றால் அது பொய்யாகாது. இவரது பாடசாலைக் கல்வி ஏழாவது வகுப்பு வரை தான். அதன் பிறகு ஒரு சமூகத் தாழ்வை கடைப்பிடிக்கும் வட பகுதியில் பல வேதனைகளை அனுபவித்த ஜீவா அவர்கள், அவ்வாறான அடக்குமுறைகளுக்கு முகம் கொடுத்திருந்தாலும் படைப்பிலக்கியத் தளத்தின் உயரத்தை எட்டிய ஒரு திறமைசாலியாகத் திகழ்ந்தார்.

தமிழ்நாட்டிலிருந்து வெளிவந்த முற்போக்கு இதழ்களான தாமரை, சரஸ்வதி போன்ற சஞ்சிகைகளில் அட்டைப் படங்களையே அலங்கரிக்குமளவிற்கு இவருக்குரிய அங்கீகாரம் உலகின் பல பாகங்களுக்கும் விரிந்து சென்றதை ஒருவராலும் தடுக்க முடியாமல் போய்விட்டது.

"மல்லிகைப் பந்தல்" என்ற பிரசுரத்தை நிறுவி, அதன் வழியாக சுமார் 80 இற்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்த பெருமைக்குரிய பதிப்பாளராகவும் விளங்கிய ஜீவா அவர்கள் உள் நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டாலும், தனது பணியை நிறுத்திவிடாமல், நூற்றுக்கணக்கான எழுத்தாளர்களுக்கு தனது மாசிகையான "மல்லிகை" மூலம் களம் அமைத்துக் கொடுப்பதை நிறுத்தி விடவில்லை.

இவரது "மல்லிகை" இதழில் புலம் பெயர் நாடுகளைச் சேர்ந்த பல எழுத்தாளர்களும் எழுதியுள்ளனர். இவர் தனது சஞ்சிகையை நீர்கொழும்பு, மட்டக்களப்பு, சிலாபம், என அனைத்து இடங்களுக்கும் அனுப்பி வந்தமையால் மலையக எழுத்தாளர்கள், முஸ்லிம் எழுத்தாளர்கள் என பலர்அவரோடு இணைந்து செயற்பட்டார்கள். இனம், மொழி, மதம், என்ற பாகுபாடுகள் அற்ற ஜீவாவிற்கு சிங்கள நண்பர்கள் ஏராளம் இருந்தார்கள். அவர்களில் இலக்கியவாதிகள், முற்போக்கு அரசியல்வாதிகள் என பலர் அடங்குவார்கள். அவர்களின் படைப்புக்கள் இவரது "மல்லிகையில்" மொழி பெயர்க்கப்பட்டு பிரசுரமாகின. தமிழ்-சிங்களு - முஸ்லிம் ஒருமைப்பாட்டிற்கான பாலமாகவும் "ஜீவா" திகழ்ந்தார். தமிழ்ச் சஞ்சிகையாளர்களின் தந்தை என்ற நிலைக்கு காலம் இவர் உயர்த்தி விட்டது.

தான்"மண்புழுவாக இருந்து மனிதனானேன்" என்று அடிக்கடிச் சொல்லுவார் ஜீவா அவர்கள். ஒரு சவரக் கடையிலிருந்து சர்வகலாசாலை வரை சென்றேன் என்று மகிழ்ச்சியுடன் கூறி நின்ற அவர் ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று பல இலக்கியக் கூட்டங்களில் கலந்து கொண்டார். ஒரு தடவை,ஜீவாவை சோவியத் யூனியன் அரசாங்கம் கூட அழைத்து கௌரவம் செய்தது. பல பரிசுகளை வழங்கியது. போராசிரியர் காலஞ்சென்ற சிவத்தம்பி அவர்கள் "ஜீவா" பற்றி பேசும் போது, ஈழம் பெற்ற ஒரு பெரிய எழுத்தாளர் அற்புதமான மனிதர்" என்று குறிப்பிட்டுள்ளார். ஜீவா அவர்கள் தனது வாழ்க்கை வரலாறறினை "ழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்" என்ற பெயரில் வெளியிட்டுள்ளார். இந்நூல் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பல விருதுகள் பரிசுகள் பெற்ற எழுத்தாளர் ஜீவா அவர்கள் இலங்கைப் பிரமரால் வழங்கப்பெற்ற"தேசபந்து" உயர் விருதினையும் பெற்றவர் ஆவார். எம்மை விட்டுப் பிரிந்து சென்றுள்ள ஜீவா அவர்கள், ஈழத்தமிழ் மக்களின் தேசிய இலக்கியவாதி என்று புகழப்பட்டவர் " எனது 50வது ஆண்டு மலரை வெளியிட்டு விட்டுத்தான் நான் இறப்பேன்" என்று கூறிவந்தாலும், ஆனால் அவரால் அதனைச் சாதிக்க முடியவில்லை. இது அவருக்கு மட்டுமல்ல, எம்போன்ற ஆயிரக்கணக்கான எழுத்தாளர்களுக்கும் ஒரு மனக்குறையாகவே தொடரப்போகின்றது.

இறுதிக் காலத்தில முதுமை காரணமாக "படுத்த படுக்கையாகக் கிடந்தவர்" ஜீவா அவர்கள். ஒரு கட்டிலும், ஒரு காற்றாடியுமே அவரது தோழர்களாக விளங்கின. இந்த இலக்கிய ஆசானின் சேவையும் சாதனையும் தமிழ் உள்ளவரை நினைவிற் கொள்ளப்படும் என்றே கூறலாம். உலக அரங்கில், அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு இலக்கியகர்த்தாவை நாம் இழந்துள்ளோம். ஈழத்து இலக்கிய வரலாற்றில் அழியாத் தடம் பதித்த ஜீவா பல மகத்தான சாதனைகளை படைத்துவிட்டுச் பறந்து சென்றுள்ளார். அவரை என்றும் மறவாமல் இருந்து அவர் தந்த படைப்புக்களை வாசித்து இன்புறுவோம்!

**("சிந்தனைப் பூக்கள்" பத்மநாதன்- கனடா)**

மலேசிய மடல்

# நேதாஜியின் 125–ஆவது பிறந்த நாள் நினைவலைகள் ஐஎன்ஏ–வில் மொழி பாகுபாடெல்லாம் இல்லை

## இந்தியாவின் டைம்ஸ் இதழில் டான்ஸ்ரீ கே. ஆர். சோமா



நக்கீரன்

கோலாலம்பூர், ஜன.27

**நே**தாஜி சுபாஸ் சந்திர போஸின் பிறந்த நாளை ஒட்டி அவர் மலாயா-சிங்கப்பூரை தளமாகக் கொண்டு உருவாக்கி வழிநடத்திய இந்திய தேசிய ராணுவத்தில் (ஐஎன்ஏ) தேசிய நில நிதி கூட்டுறவு சங்கத் தலைவர் டான்ஸ்ரீ கே.ஆர். சோமசுந்தரம் அவர்கள் இணைந்து செயல்பட்டதை இந்தியாவின் டைம்ஸ் இதழுடன் பகிர்ந்து கொண்டுள்ளார்.



TIMES N

No language barriers, we were all one, recalls INA veteran

"மொழி பாகுபாடெல்லாம் இல்லை அனைவரும் ஒருமுகமாக செயல்பட்டோம்" - ஐஎன்ஏ மூத்த படைவீரர் நினைவுகூர்கிறார் என்ற தலைப்புடன் அந்தச் செய்தி தொடங்குகிறது.

நேதாஜியின் 125-ஆவது பிறந்த நாள் ஜனவரி 23-ஆம் நாள் தேசிய அளவில் கொண்டாடப்பட்டது. இதன் தொடர்பில், வெகு தொலைவில் இருந்து, மலேசியாவைச் சேர்ந்த கே.ஆர். சோமசுந்தரம் என்னும் ஐஎன்ஏ படைவீரர், தன்னுடைய நினைவுகளை ஏக்கத்துடன் நினைவுகூர்கிறார்.

14 வயதாக இருந்தபோதே, "எனக்கு 16 வயதாகிவிட்டது. அதனால் ஐஎன்ஏ-வில் சேருவதற்கு முழு தகுதி உள்ளது" என்று ஐஎன்ஏ அதிகாரிகளை சம்மதிக்க வைத்து அதில் இணைந்ததாக அவர் தெரிவித்தார். 16 வயதானால்தான் ஐஎன்ஏ-வில் சேரலாம் என்ற விதி அப்போது வரையறுக்கப் பட்டிருந்தது.



என்னுடைய நடவடிக்கையில் ஐஎன்ஏ அதிகாரிகள் ஏமாந்து போயிருக்க வேண்டும் அல்லது இந்திய தேசிய ராணுவத்தில் சேர்ந்துவிட வேண்டும் என்ற என் ஆர்வம் அவர்களை வென்றிருக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு மலேசியாவில் தோட்டத் தொழிலாளர்களின் கூட்டுறவு இயக்கமான தேசிய நில நிதி கூட்டுறவு சங்கத்தின் தற்போதைய தலைவருமான தொண்ணூறு வயது சோமசுந்தரம் வேகமாக சிரிக்கிறார் என்று புது டில்லி நிருபர் ஆராதனாவின் செய்தி தொடர்கிறது.

நான் மட்டுமல்ல: நேதாஜியின் எழுச்சிமிக்க உரையைக் கேட்டபின் மலாயா-சிங்கப்பூரைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான சிறுவர்களும் சிறுமியரும்கூட ஐஎன்ஏ-வில் இணைந்து இந்திய விடுதலைக்காக தங்களின் இன்னுயிரை தியாகம் செய்ய அணிவகுத்ததை அதிகாரிகள் வியப்புடன் எதிர்கொண்டனர். அவ்வாறு, சிங்கப்பூர் கெத்தே திரையரங்கில் ஒருமுறை நேதாஜி ஆற்றிய வீர உரை குறித்து, "சிப்பாய்கள், பொதுமக்கள் என ஈராயிரத்துக்கும் மேற்பட்டோர் இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக ஆடாமல் அசையாமல் நேதாஜியின் உரையை அமைதியாக உற்று நோக்கினர். அவர் பேசி முடித்ததுதான் தாமதம் வானத்தில் எதிரொலிக்கும் அளவுக்கு கரவொலி எழுப்பி முழக்கம் செய்தனர்" என்று சோமசுந்தரம் உள்ளம் நெகிழ்ந்தார்.



சோமசுந்தரத்தைப் பொறுத்தவரை, சொந்த ஊரில் ஒரு கடையில் உதவியாளராக சேர்ந்தபோதுதான், நேதாஜியைப் பற்றி அறிந்து கொள்ள நேரிட்டது. "1942-இல் ஆங்கிலேயர்கள் பின் வாங்கிய காலக் கட்டத்தில் பள்ளிகளும் மூடப்பட்டிருந்ததால் என் தந்தை அவருடைய நண்பரின் கடையில் சேர்த்து விட்டார். அப்போதுதான், இந்திய விடுதலைப் போராட்டம் குறித்து நிறைய கேள்விபட்டதுடன், பத்திரிகை மூலமாகவும் அதிகமாக அறிந்து கொண்டேன்" என்றார்.

நேதாஜி ஏற்படுத்திய இராணுவக் கட்டமைப்பு, ஆசாத் இந்திய அரசை மட்டும் நிறுவவில்லை அவரின் சீரிய தலைமைக்கு இன்றளவும் தக்க சான்றாக அது விளங்குகிறது. ஐஎன்ஏ-வில் இணைந்த இந்திய அதிகாரிகளின் தலைமையில் ஒன்பது மாத கால கொரில்லாத் தாக்குதல் மற்றும் வனப் பயிற்சியைப் பெற்றதாகக் குறிப்பிடும் சோமசுந்தரம், ஐஎன்ஏ-வில் ஆங்கிலவழி இந்தி (Romanized Hindi) பயன்படுத்தப்பட்டாலும் மொழியால் எந்தத் தடையும் ஏற்பட்டதில்லை அனைவரும் சமமாக விளங்கினோம்" என்று டான்ஸ்ரீ கே.ஆர். சோமசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டதாக புதுடில்லி டைம்ஸ் நாளிதழ் ஜனவரி 24-ஆம் நாள் செய்தி மேலும் குறிப்பிடுகிறது.

**- நக்கீரன்** (Nakkeeran)**: 013-244 36 24**



Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற
கனகாம்பிகை
தங்கநகை அடகுமாடம்
KANAGAAMBIKAI
PAWN BROKERS
25
வருடங்கள்
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை
பவுண் வங்கி
தங்கம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...
2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 931



## இலஞ்சியாரண்யம் சோலைஅம்மன் கோயில் மண்டுவில், யாழ்ப்பாணம்

'மன்னு மலையரையன் பொற்பாவை வான்நிலா
மின்னு மணிமுறுவல் செவ்வாய் உமையென்னும்
அன்னநடைய அணங்கு நுடங்கிடைசேர்
பொன்னுடம்பு வாடப் புலனைந்தும் நொந்தகல
தன்னுடைய கூழைச் சடாபாரம் தான் தரித்தாங்கு
அன்ன அருந்தவத்தின் ஊடுபோய்'

பார்க்குமிடமெல்லாம் விண்ணுயர்ந்து நிற்கும் கோபுரங்களைக் கொண்ட திருக்கோயில்களும், அவற்றுள் எழுகின்ற நாத, வேத, கான இசையும் மக்களை இறைவன்பால் ஈர்க்கின்றது. தமிழர்களின் ஆன்மீகநெறி, சமூகவாழ்க்கை, கலாச்சாரம், பண்பாடு, நுண்கலைகள் ஆகியவைகளின் மையமாக சிவாகமமுறையிலமைந்த ஈழத்துத்திருக்கோயில்களின் அமைப்பு காணப்படுகின்றது. இவற்றோடு ஆகம முறையிலமையாத பல கோயில்களும் ஈழமெங்கும் பரந்து காணப்படுகின்றன.

வானளாவி நிற்கும் கோயில்களின் அமைப்பு, இன்று காணப்படுவதுபோல அமைந்து காணப்படவில்லை. அவ்வாறே தெய்வங்கள்பற்றி குறிப்புக்களும் தற்கால நிலையிலிருந்து வேறுபட்டதாகவே காணப்படுகின்றது. சங்கநூல்களிலும், அவற்றிற்குக் காலத்தால் முந்திய தொல்காப்பியத்திலும், தெய்வம்பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. தொல்காப்பியத்தில் "தெய்வம், உணர்வே, மா, மரம், புள், பறை" என்று கூறப்பெற்ற கருப்பொருள்களுள் ஒன்றாகத் தெய்வம் உள்ளது. நானிலத் தெய்வங்களாக மாயோன், சேயோன், வேந்தன், வருணன் ஆகியோர் குறிக்கப் பெற்றுள்ளனர்.

வரலாற்று அறிவுக்கு எட்டிய காலந்தொட்டே தமிழினம் இறைவனை கண்ணுக்கினிய பொருளாகக் கொண்டு, திருக்கோலத் திருமேனிகள் அமைத்து வழிபட்டு வருகின்றது. "ஆலயமாக அமர்ந்திருந்தானே" என்றும், "ஐந்தன் பெருமையே ஆலயமாவது" என்றும் திருக்கோயிலின் பெருமையை திருமூலர் அழகாக விளக்கியுள்ளார். அப்பரடிகளும் திருக்கோயில் வழிபாட்டை வலியுறுத்தி, அதன் பெருமையை எடுத்தியம்பியுள்ளார். "ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" என்று மெய்கண்டாரும் கூறியுள்ளார்.

ஆலய வழிபாடு உலகியல் சூழலில் ஆழ்ந்து கிடக்கும் உயிர்களைக் கரையேற்றும் என்ற நம்பிக்கையை, நமது முன்னோர்கள் மக்களுக்கு பல வழிகளிலும் ஊட்டியுள்ளனர். சிவனைப் பரம்பொருளாகக்கொண்ட வழிபாடாக சைவசமயம் காணப்படுகின்றது. உலகஇயக்கங்களை நடத்தும்பொருட்டு, வெவ்வேறுநிலைகளில் பரம்பொருளிடமிருந்து சக்தி தோற்றம்பெற்றுள்ளது. உலகம் இயங்கத் தேவையான சக்தியை விளக்கும் விஞ்ஞானமே சாக்தம் என அழைக்கப்படுகின்றது. சக்தியின்றி எதுவும் இயங்காது என்பதனை அனைவரும் அறிவர். இச்சக்தியே நிலையாக நின்று வாழ உதவுகின்றது.

"இச்சா மாத்ரம் ப்ரபோ ச்ருஷ்டி" என ஆன்றோர் வாக்கியம் கூறுகின்றது. சக்தியின் இச்சையாலேயே இப்பிரபஞ்சம் தோன்றிற்று. சக்தியின் இச்சையிலேயே அது இயங்கி வருகின்றது. அவள் இச்சையிலேயே பிரளய காலத்தில் மாயப் பிரபஞ்சமாக மாறி, அவளோடு இரண்டறக் கலந்து விடுகின்றது. இதுவே வேதம் கூறும் தத்துவமாகக் காணப்படுகின்றது. ஒன்றுமறியாத சாதாரண மனிதன் முதல் யோகிகள், ஞானிகள், முனிவர்கள் என அனைவரும், தாய்மை என்ற சொல்லில் விளங்கும் தயை, தாட்சண்யம், கருணை, உரிமை ஆகிய குணங்களின் அருமை பெருமைகளை அறியாமலிருக்க முடியாது.

இந்துசமய வழிபாட்டிலே சக்தி என்றும், சிவம் என்றும் கூறப்பட்டுள்ளது. சக்தி என்னும் சப்தத்திலே செயல் என்னும் சொல் மறைந்து நிற்கின்றது. சக்தி என்னும்போது சலனம் (Movement) புலப்படுகின்றது. சிவம் என்பது ஜடம். அது நிர்மலமானது. தானே இயங்க முடியாதது. ஆனால் சிவம், சக்தியின் துணை கொண்டு இயங்கினாலேயே சிருஷ்டி, ஸ்திதி, சம்காரம் ஆகிய மூன்றின்கண் அடங்கிய உலகமே இயங்க முடியும். சுவரூபமற்றதே சக்தி என்னும் பரம்பொருள். ஆயினும் சாதாரண நிலையிலுள்ள மக்கள் இதைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாது. இக்காரணத்தினாலேயே அந்த சுத்தசக்தி தன்னையே உருவகப்படுத்திக்கொண்டு யாவற்றிலும் மிளிர்கின்றது. இவ்வாறான அடிப்படையிலேதான் விக்கிரக ஆராதனை ஏற்பட்டது. தொழில் வேறுபாட்டினால் சக்திக்கு ஆதிசக்தி, பராசக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி எனப் பல பெயர்கள் காணப்படுகின்றன. ஈசானம் முதல் சத்தியோசாதம் ஈறாகிய பஞ்ச சக்திகளையும், நிவிர்த்தி முதல் சந்தீயதீதை ஆகிய பஞ்ச சக்திகளாயும், பிறவாயும் சிவசக்தி காணப்படும்.

சக்தியின் தோற்றப்பாடு ஒன்றேயாயினும், யுகம் யுகமாக உலகத்திலே நடைபெறும் காரண காரியங்களுக்காக சக்தியின் பல்வேறு வடிவங்களிலே அன்னை போற்றப்படுகின்றாள். இவ்வாறான வடிவங்களுள் மனோன்மணி அம்பாள் வடிவமும் குறிப்பிடத்தக்கதாகும். ஈழத்திலே மனோன்மணி அம்பாளை மூலமூர்த்தியாகக் கொண்ட கோயில்கள் சிலவாகவே காணப்படுகின்றன. இவ்வாறான கோயில்களுள் யாழ்ப்பாணம் மண்டுவில் பிரதேசத்தில் அமைந்துள்ள இலஞ்சியாரண்யம் சோலை அம்மன் கோயில், மிகவும் பிரசித்தமுடைய அம்மன் கோயிலாக விளங்குகின்றது.

இவ்வாலயம் மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் முருகைக்கற்களாலும், சுண்ணாம்புக் கலவையினாலும் கட்டப்பட்டிருந்தது. 1971 ஆம் ஆண்டு பொழிகற்களால் புதுப்பிக்கப்பட்டு, அவ்வருடமே ஆனிஉத்தர நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. மண்டுவில் இலஞ்சியாரண்யம் சோலை அம்மன்கோயில் அமைந்துள்ள நிலப்பிரதேசம் இயற்கை அழகு கொண்டதாக விளங்குகின்றது. மருதமும், முல்லை நிலமும் இணைந்த பிரதேசத்தில் மண்டுவில் என்ற நீர்நிலையைக் காரணப் பெயராகக் கொண்ட இடத்திலே, இலஞ்சியாரண்யம் அமைந்துள்ளது. இலஞ்சியாரண்யம் சுமார் ஆறு ஏக்கர் பரப்பளவு கொண்ட அடர்த்தியான சோலையில் அமைந்துள்ளது. இலஞ்சி என்பதற்கு மகிழ் அல்லது வற்றாத நீர் ஊற்று என்று பொருள்படும். இங்கு மருத்துவமூலிகை வகையான மகிழமரங்களும், வற்றாத நீரூற்றும் அமைந்து அழகுக்கு அழகு செய்கின்றது. இவ்வாறான சோலைகள் மிகுதியாகக் கொண்ட சூழலிலே எழுந்தருளியுள்ள அம்பாளை, காரணப் பெயராகக் கொண்டு சோலை அம்மன் என அழைக்கின்றார்கள்.

*வளரும்...*

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும் அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

ALL DEBT SOLUTIONS CR PLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# அன்பின் தொனி - 597

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம் - ஜெபத்தின் வல்லமை.**

### தேவனே, எழுந்தருளும், பூமிக்கு நியாயத்தீர்ப்புச் செய்யும்

தேவசபையிலே தேவன் எழுந்தருளியிருக்கிறார், தேவர்களின் நடுவிலே அவர் நியாயம் விசாரிக்கிறார். எதுவரைக்கும் நீங்கள் அநியாயத்தீர்ப்புச்செய்து, துன்மார்க்கருக்கு முகதாட்சிணியம் பண்ணுவீர்கள். ஏழைக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் நியாயஞ்செய்து, சிறுமைப்பட்டவனுக்கும் திக்கற்றவனுக்கும் நீதி செய்யுங்கள். பலவீனனையும் எளியவனையும் விடுவித்து, துன்மார்க்கரின் கைக்கு அவர்களைத் தப்புவியுங்கள். அறியாமலும் உணராமலும் இருக்கிறார்கள், அந்த காரத்திலே நடக்கிறார்கள், தேசத்தின் அஸ்திபாரங்களெல்லாம் அசைகி-றது. நீங்கள் தேவர்கள் என்றும், நீங்களெல் லாரும் உன்னதமானவரின் மக்கள் என்றும் நான் சொல்லியிருந்தேன். ஆனாலும் நீங்கள் மனுஷரைப்போலச் செத்து, லோகப்பிரபுக்களில் ஒருவனைப்போல விழுந்துபோவீர்கள். தேவனே, எழுந்தருளும், பூமிக்கு நியாயத்தீர்ப்புச் செய்யும், நீரே சகல ஜாதிகளையும் சுதந்தரமாகக் கொண்டிருப்பவர். **- சங்கீதம் 82: 1-8**

### தேவரீர் ஒருவரே பூமியனைத்தின்மேலும் உன்னதமானவர்

தேவனே, மவுனமாயிராதேயும், பேசாமலிராதேயும், தேவனே, சும்மாயிராதேயும். இதோ, உம்முடைய சத்துருக்கள் கொந்தளித்து, உம்முடைய பகைஞர் தலையெடுக்கிறார்கள். உமது ஜனத்துக்கு விரோதமாக உபாய தந்திரங்களை யோசித்து, உமது மறைவிலிருக்கிறவர்களுக்கு வி-ரோதமாக ஆலோசனைபண்ணுகிறார்கள். அவர்கள் இனி ஒரு ஜாதியாரா-யிராமலும், இஸ்ரவேலின் பேர் இனி நினைக்கப்படாமலும் போவதற்காக, அவர்களை அதம்பண்ணுவோம் வாருங்கள் என் கிறார்கள். இப்படி, ஏதோமின் கூடாரத்தாரும், இஸ்மவேலரும், மோவாபியரும், ஆகாரியரும், கேபாலரும், அம்மோனி யரும், அமலேக்கியரும், தீருவின் குடிகளோடுகூடிய பெலிஸ்தரும், ஏகமனநிர்ணயமாய் ஆலோசனைசெய்து, உமக்கு விரோதமாய் ஒப்பந்தம்பண் ணிக்கொண்டிருக்கிறார்கள். அசீரியரும் அவர்களோடேகூடக்கலந்து, லோத்தின் புத்திரருக்குப் புயபலமானார்கள். மீதியானியருக்குச் செய்ததுபோலவும், கீ-சோன் என்னும் ஆற்றண்டை எந்தோரிலே அழிக்கப்பட்டு, நிலத்துக்கு எருவாய்ப்போன சிசெரா, யாபீன் என்பவர்களுக்குச் செய்ததுபோலவும், அவர்களுக்குச்செய்யும். அவர்களையும் அவர்கள் அதிபதிகளையும் ஓரேபுக்கும் சேபுக்கும், அவர்கள் பிரபுக்களையெல்லாம் சேபாவுக்கும் சல்முனாவுக்கும் சமமாக்கும். தேவனுடைய வாசஸ்தலங்களை எங்களுக்குச் சுதந்தரமாக நாங்கள் கட்டிக்கொள்வோம் என்று சொல்லுகிறார்கள். என் தேவனே, அவர்களைச் சுழல் காற்றின் புழுதிக்கும், காற்றுமுகத்தில் பறக்கும் துரும்புக்கும் சமமாக்கும். நெருப்பு காட்டைக் கொளுத்துவதுபோலவும், அக்கினி ஜுவாலைகள் மலைகளை எரிப்பதுபோலவும், நீர் உமது புசலி-னாலே அவர்களைத் தொடர்ந்து, உமது பெருங்காற்றினாலே அவர்களைக் கலங்கப்பண்ணும். கர்த்தாவே, அவர்கள் உமது நாமத்தைத் தேடும்படிக்கு, அவர்கள் முகங்களை அவமானத்தாலே மூடும். யேகோவா என்னும் நாமத்தையுடைய தேவரீர் ஒருவரே பூமியனைத்தின்மேலும் உன்னதமானவர் என்று மனுஷர் உணரும்படி, அவர்கள் என்றைக்கும் வெட்கிக்கலங்கி, நாணமடைந்து அழிந்து போவார்களாக. **- சங்கீதம் 83: 1-18**

### தேவரீர் ஒருவரே பூமியனைத்தின்மேலும் உன்னதமானவர்

சேனைகளின் கர்த்தாவே, உமது வாசஸ்தலங்கள் எவ்வளவு இன்பமானவைகள்! என் ஆத்துமா கர்த்தருடைய ஆலயப் பிரகாரங்களின்மேல் வாஞ்சையும் தவனமுமாயிருக்கிறது, என் இருதயமும் என் மாம்சமும் ஜீவனுள்ள தேவனை நோக்கிக் கெம்பீர சத்தமிடுகிறது. என் ராஜாவும் என் தேவனுமாகி-ய சேனைகளின் கர்த்தாவே, உம்முடைய பீடங்களண்டையில் அடைக்கலான் குருவிக்கு வீடும், தகைவிலான் குருவிக்குத் தன் குஞ்சுகளை வைக்கும் கூடும் கிடைத்ததே. உம்முடைய வீட்டில் வாசமாயிருக்கிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் எப்பொழுதும் உம்மைத் துதித்துக்கொண்டி ருப்பார்கள். உம்மிலே பெலன்கொள்ளுகிறமனுஷனும், தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள். அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக் கொள்ளுகிறார்கள், மழை-யும் குளங்களை நிரப்பும். அவர்கள் பலத்தின்மேல் பலம் அடைந்து, சீயோ-னிலே தேவசந்நிதியில் வந்து காணப் படுவார்கள். சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, என் விண்ணப்பத்தை கேளும், யாக்கோபின் தேவனே, செவி கொடும். எங்கள் கேடகமாகிய தேவனே, கண்ணோக்கமாயிரும், நீர் அபிஷே'கம் பண்ணினவரின் முகத்தைப் பாரும். ஆயிரம் நாளைப்பார்க்கிலும் உமது பிராகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது, ஆகாமியக் கூடாரங்களில் வாசமா யிருப்பதைப்பார்க்கிலும் என் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்துகொள்ளுவேன். தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர், கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார், உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார். சேனைகளின் கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிற மனுஷன் பாக்கியவான்.
**- சங்கீதம் 84: 1-12**

### கர்த்தராகிய தேவன் விளம்புவதைக் கேட்பேன்

கர்த்தாவே, உமது தேசத்தின்மேல் பிரியம் வைத்து, யாக்கோபின் சிறையிருப்பைத் திருப்பினீர். உமது ஜனத்தின் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவத்தையெல்லாம் மூடினீர். உமது உக்கிரத்தையெல்லாம் அடக்கிக்கொண்டு, உமது கோபத்தின் எரிச்சலைவிட்டுத் திரும்பினீர். எங்கள் இரட்சிப்பின் தேவனே, நீர் எங்களைத் திருப்பிக்கொண்டு வாரும், எங்கள்மேலுள்ள உமது கோபத்தை ஆறப்பண்ணும். என்றைக்கும் எங்கள்மேல் கோபமாயிருப்பீரோ? துலை முறை தலைமுறையாக உமது கோபத்தை நீடித்திருக்கப்பண்ணுவீரோ? உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ? கர்த்தாவே, உமது கிரு-பையை எங்களுக்குக் காண்பித்து, உமது இரட் சிப்பை எங்களுக்கு அருளிச்செய்யும். கர்த்தராகிய தேவன் விளம்புவதைக் கேட்பேன், அவர் தம்முடைய ஜனங்களுக்கும் தம்முடைய பரிசுத்தவான்களுக்கும் சமாதானம் கூறுவார், அவர்களோ மதிகேட்டுக்குத் திரும்பாதிருப்பார்களாக. நம்முடைய தேசத்தில் மகிமைவாசமாயிருக்கும்படி, அவருடைய இரட்சிப்பு அவருக்குப் பயந்தவர்களுக்குச் சமீபமாயி ருக்கிறது. கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும், நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும்.
**- சங்கீதம் 85: 1-10**

## வட்டு இந்து வாலிபர் சங்க கனடாக்கிளை வட்டுக்கோட்டை பாடசாலைகளின் மாணவர்களுக்கு 1000 அப்பியாச கொப்பிகள் வழங்கியது

வட்டு இந்து வாலிபர் சங்க கனடாக்கிளையின் வருடாந்த பொங்கல் விழாவினை முன்னிட்டு வட்டுக்கோட்டை பிரதேச பாடசாலைகளில் கல்வி கற்று வரும் கல்வியில் ஆர்வமுள்ள 100 மாணவர்களுக்கு ரூபா 60,000 பெறுமதியில் 1000 அப்பியாச கொப்பிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

கனடாக்கிளையின் பொங்கல் விழா சிறப்புற நடைபெற மாணவர்கள் சார்பிலும், வட்டுக்கோட்டை வாழ் மக்களின் சார்பிலும் மற்றும் தாய் சங்கத்தின் சார்பிலும் மனமார்ந்த வாழ்த்துக்களை கூறிக்கொள்கின்றோம்.





















# 15ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
11-11-1927

இறப்பு
26-01-2006

யாழ். சாவகச்சேரி மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும்,
மீசாலை, கனடா Toronto ஆகிய இடங்களை
வதிவிடமாகவும் கொண்டிருந்த கு.வி. மகாலிங்கம்
அவர்களின் 15ம் ஆண்டு நினைவஞ்சலி.

பப்பா என்றழைத்தோம், பண்பான வழிதந்தீர்
தப்பும் தவறாமல் அறநெறியைக் காட்டிநின்றீர்
சைவப் புலமை பெற்றாய், சான்றோர்கள் புலவனென்றார்
கு.வி. குரல்கேட்டுக் குவலயத்தார் வளம்பெற்றார்

பப்பா என்றழைத்துப் பதினைந்து ஆண்டாச்சு
சொக்கா என்றழைத்து சிவனடியே சேர்ந்தாச்சு
காலம்தான் கடந்தாலும் நம்நெஞ்சமெல்லாம் நீதானே
நின்பூவுடல்தான் கரைந்தாலும் புகழுடம்பு மறையாதே

உங்கள் நினைவில் மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்

## திரு கு.வி. மகாலிங்கம்

சைவப்புலவர்; சைவசித்தாந்த பண்டிதர்; வித்துவான்
மீசாலை வடக்கு(பிறந்த இடம்) மீசாலை Toronto - Canada

தகவல்: குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு
குமார் - மகன்: 416-505-2109
குணா : 416-822-7615



# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com















உதயம் 1295 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 29, 2021

# கனடா விமான பயணிகளுக்கான இலவச, தன்னார்வ அடிப்படையிலான பரீட்சார்த்த பரிசோதனை

கோவிட்-19 நோய்த்தொற்றை விரைவாகக் கண்டறிந்து தடுப்பதற்கென, ரொறன்ரோ பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கும் பயணிகளிடம் தன்னார்வ அடிப்படையிலான இலவச நோய்த்தொற்றுக்கான பரீட்சார்த்த பரிசோதனைத் திட்டம் ஒன்று ஒன்ராறியோ அரசினால் செயற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம், 6,800 இற்கும் மேற்பட்ட சர்வதேச பயணிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்நடைமுறை முன்னேற்றகரமாக இருந்தபோதிலும், வெளிநாடுகளிலிருந்து வரும் அனைத்துப் பயணிகளுக்கும் கட்டாய பரிசோதனை செய்வதற்கும், கொரோனா நோய்த்தொற்றின் புதிய வகைகள் கண்டறியப்பட்ட நாடுகளிலிருந்து வரும் விமானங்களுக்கு தற்காலிக தடை விதித்து எல்லைப் பாதுகாப்பை பலப்படுத்துமாறும் ஒன்றாறியோ அரசாங்கம் கனடிய நடுவண் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது. மாற்றமடைந்து வரும் நிலைமையைக் கண்காணிப்பதற்கு கனடாவின் பொது சுகாதார அமைப்புடனும் பிற அதிகார கட்டமைப்புகளுடனும் ஒன்ராறியோ மாகானம் தொடர்ந்து பணியாற்றும். மேலதிக பணியாளர்கள், மேம்பட்ட சோதனைகள் மற்றும் தொற்று ஏற்பட்ட வழியை அடையாளங்காணுதல் போன்ற நடவடிக்கைகளை உறுதிப்படுத்தி பொதுமக்களைப் பாதுகாக்கும் முயற்சிகளுக்கு ஒன்ராறியோ அரசு தொடர்ந்து ஆதரவளித்தும், அவற்றை ஒருங்கிணைத்தும் வருகின்றது.

*விஜய் தணிகாசலம், மானில சட்டமன்ற உறுப்பினர்*
*ஸ்காபரோ, றூஜ் பார்க். -ஒன்ராறியோ- கனடா*

# தமிழ்நாட்டில் தவிக்கும் ஈழ அகதிகளை மீட்டெடுக்க யார் வருவார்?



**யாழ்ப்பாணத்திலிருந்து விசாகன்**

இலங்கையில் இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான அடக்கு முறைகள் அதனைத் தொடர்ந்து ஆரம்பமான விடுதலைப் போராட்டம் என்பனவே எமது வடக்கு கிழக்கு பிரதேசங்களிலிருந்து இலட்சக் கணக்கான மக்களை புலம் பெயர வைத்தன என்று கூறுவதில் மாற்றுக் கருத்தக்களே தோன்ற முடியாது. எவ்வளவிற்கு போராட்டங்களினாலும் இராணுவ மட்டும் சிவில் அடக்கு முறை-களினாலும் துன்புறுத்தல்களும், அச்சமும், சொத்துக்கள் இழப்பும், தாக்குதல்களினால் அப்பாவி மக்களும் உயிர் துறக்கின்ற சம்பவங்களும் தொடர்ச்சியாக இடம்பெற்றதனால், தமிழ் மக்கள் இடம்பெயரத் தொடங்கினார்கள்.

இவ்வாறு இலங்கையை விட்டு பல்வேறு வழிகளையு ம் மார்க்கங்களையும் பயன்படுத்தி வெளியேறத் தொடங்கினார்கள். குறிப்பிட்ட எண்ணிக்கையினர். விமான நிலையங்கள் ஊடாக சட்டரீதியான பயணங்களை மேற்கொண்டார்கள். சில கடல் மார்க்கமாக சட்டத்திற்கு முரணான பயணங்களை மேற்கொண்டார்கள். சிலர் விமான நிலையங்களுக்கு ஊடாக வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டாலும், சட்டத்திற்கு முரணான வகையில் பத்திரங்களையும் கடவுச்சீட்டுக்களையும் பயன்படுத்தி நாட்டை விட்டு வெளியேறினார்கள். இப்படியாக இலட்சக்கணக்கானவர்கள் பல்வேறு வகையான பயணங்கள் மூலம் இலங்கையை விட்டுச் சென்றாலும், அவர்கள் அனைவருக்கும் பொதுவான காரணம் ஒன்றாகவே இருந்தது. ”இங்கு இந்த பிரச்சனைகளுக்கு மத்தியில் வாழ்ந்து உயிரையும் உடமைகளையும் உறவுக-ளையும் இழப்பதிலும் பார்க்க, எங்கேயாவது ஒரு நாட்டிற்கு போய் அங்கு அகதியாய் வாழ்ந்தாலும் பரவாயில்லை” என்ற ஓரே தூர நோக்கு தான் அவர்கள் தாயக மண்ணை விட்டு நீங்கிச் செல்ல தூண்டியது என்றே கூறலாம்.

*(உள்ளே 10ம் பக்கம் -தொடர்ச்சி)*

# அமரர் கல்கியின் ‘பொன்னியின் செல்வன்’ வரலாற்று நாவலை வாரா வாரம் வாசித்துப் பரவசமடையுங்கள

கன்னித் தமிழின் செழுமையும், வண்ணத் தமிழின் வசீகரமும், தொன்மைத் தமிழின் நாகரீகமும், முன்னைத் தமிழனின் வீரமும்.ஒருங்கே சேர இலக்கிய நயத்துடன் படைக்கப்பெற்று பல தடவைகள் “கல்கி“ இதழில் தொடராக வெளிவந்த “பொன்னியின் செல்வன்“ மீண்டும் உங்கள் கண்களுக்கும் எண்ணங்களுக்கும் இதமளிக்க எழுத்தில்..வருகின்றான்..

அந்த அற்புதமான வரலாற்று நாவலை தமிழ் மக்கள் வாழும் நாடுகளில் உள்ளவர்கள் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னர் வாசித்து மகிழ்ந்திருப்பார்கள். ஆனால் மறந்திருக்க மாட்டார்கள்.

அந்த அற்புதமான படைப்பை மீளவும் எழுதி எமது வாசகர்களுக்காக தமது இலக்கியத் தாகத்தோடு படைத்தளிக்கின்றார்கள் கனடா வாழ் “கல்கி“யின் அபிமானிகள் மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை ம்றறும் மாதினி நிமலன் ஆகியோர்.

பெப்ரவரி முதல்வாரத்தில் வரும் வெள்ளிக்கிழமை தொடக்கம் வாரா வாரம் “பொன்னியின் செல்வன்“ வரலாற்று நாவல் புதுவடிவில்..உ ங்களுக்காக.. காத்திருங்கள்

எமது கனடா உதயன் வெள்ளி விழா ஆண்டில், எமது பத்திரிகையிலும், ஆகிய இணையத்தளங்களிலும் எமது முகநூலிலும் பொன்னியின் செல்வனை அடுத்த வாரம் தொடக்கம் சந்திக்கத் தவறாதீர்கள்.

***கனடா உதயன்***
***ஆசிரிய பீடம்***

